பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 08 திங்கட்கிழமை (23-06-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:208

## லண்டனில் பிரிட்டிஷ் பிரதமருடன் இன்று பிரதமர் ரணில் முக்கிய பேச்சு

### ஹெல்கிசனும், சொல்ஹெய்மும் இன்று லண்டன் வருகை

கொழும்பு,ஜூன்23

லண்டனுக்கு விஜயம் செய்திருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரைச் சந்தித்து முக்கிய பேச்சு நடத்துவார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பொனாண்டோ, செயலாளர் பிரட்மன் வீரக்கோன், சட்டமா அதிபர் கமலசபேசன் ஆகியோருடன் நேற்று அதிகாலை 3 மணிக்கு ஸ்ரீலங்கா விமானம் மூலம் லண்டன் பயணமானார்.

இதேவேளை, நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், நோர்வே வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் ஆகிய இருவரும் இன்று லண்டன் போய்ச்சேரவிருக்கின்றனர். இவர்கள் லண்டனில் பிரதமர் ரணில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் பற்றி உயர்நீதிமன்றத்துக்கு மனு

யாழ்ப்பாணம்,ஜூன்23

குடாநாட்டில் 1996 - 97 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோரின் நிலையை வெளியிடக் கோரி உயர் நீதி மன்றத்தில் அடுத்தவாரம் மனுத்தாக்கல் செய்யப்படவிருக்கின்றது.

வடக்கில் காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கத்தின் கலந்துரையாடல் ஒன்று நேற்றுக்காலை முனியப்பர் கோயில் பகுதியில் இடம்பெற்ற சமயம் இது விடயமாக முடிவு எடுக்கப்பட்டது.

வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பான நடவடிக்கைகளை சங்கத்தின் செயலாளர் எஸ்மோகன் மேற்கொண்டு வருகிறார் என்றும் -

வழக்குத் தொடர்பாக கூடுதல் விவரங்களை சம்பந்தப்பட்டவர்களிடம் பெறுவதற்காக சட்டத்தரணிகளான

(14ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் மீண்டும் போருக்குத் தயாராகின்றனர்

## நாடு துண்டாடப்படுகின்றது என்கிறார் மஹிந்த ராஜபக்ஷ

### சுதந்திரக் கட்சி மாநாட்டில் உரை

கொழும்பு,ஜூன்23

இந்த அரசாங்கம் தான் பதவியில நீடிப்பதற்காகப் புலிகளுக்கு உத்தியோகப்பற்றற்ற வகையில் தமிழீழத்தைக் கொடுத்து நாட்டைத் துண்டாடும் முயற்சியில் ஈடுபட்டுவருகிறது என்றார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

நிட்டம்புவையில் நேற்று நடைபெற்ற சுதந்திரக் கட்சி மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

நாடு துண்டாடப்படுவதை நிறுத்தி நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றப் பொறுப்புவாய்ந்த மக்கள் சக்தியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்துத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

கதிர்காமா

ஜனாதிபதியின் வெளிவிவகார

(14ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக்கட்சி மாநாட்டில் ஜனாதிபதி அபாய அறிவிப்பு

கொழும்பு,ஜூன்23

**விடுதலைப் புலிகள் மீண்டும் போருக்குத் தயாராகி வருகின்றனர் என்று நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன. தற்போதைய அரசு பேச்சு வார்த்தைகளின் மூலம் உத்தியோகப்பற்றற்ற வகையில் தமிழீழத்தை புலிகளுக்கு வழங்க முயற்சி செய்து வருகின்றது.**

**- இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியிருக்கின்றார்.**

நிட்டம்புவையில் நேற்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு தலைமை உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு அரசின் மீது குற்றம் சுமத்தினார்.

மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது கட்சி மீண்டும் அதிகாரத்துக்கு வந்ததும் எனது தலைமையிலான அரசு ஒன்றின் கீழ் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தீர்மானித்து உள்ளேன். புலிகளிடம் ஏமாந்து போகாமல் சரியாகத் திட்டமிட்ட அடிப்படையில் அனைத்து இன மக்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்தில் தீர்வை எட்டும் வகையில் பேச்சுக்களை நடத்துவோம்.

ஜனாதிபதி என்ற வகையில் நான் மிகப் பொறுப்புடன் கூறுவது என்னவென்றால், புலிகள் உடனடியாகப் போர் ஒன்றுக்குத் தயாராகி வருகின்றனர். தேசியப் பாதுகாப்புக் குழுவின் தலைவர் என்ற வகையில் இராணுவத் தளபதிகள், முப்படை உயரதிகாரிகள், புலனாய்வுத் துறையினர் ஆகியோரின் தகவல்களின்படி எந்த நேரத்திலும் யுத்தம் ஆரம்பிக்கப்படலாம் என்ற சூழ்நிலையே தற்போது நிலவுகின்றது என நான் அறிகிறேன்.

எனினும், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நாம் தயாராகவே இருக்கிறோம். புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான அடித்தளத்தை நாமே முன்னர் ஏற்படுத்தினோம். அதனால் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை நிராகரிக்கும் நோக்கம் எமக்கில்லை. ஆனால், பேச்சுவார்த்தைகளைத் திட்டமிட்டு புலிகளிடம் ஏமாந்து போகாத முறையிலும், அவர்களுக்கு அடிமையாகாத விதத்திலும் நாம் மேற்கொள்வோம்.

- இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

(ஐ-9)

## புலிகளின் கப்பல் வருவது பற்றி முதலில் இராணுவத்துக்கே தகவல் கிடைத்ததாம்!

### பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்23

புலிகளின் இரண்டு கப்பல்கள் இலங்கையை நோக்கி வந்துகொண்டிருக்கின்றன என்ற தகவலை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல பலகல்ல சம்பவம் நடப்பதற்கு மூன்று தினங்களுக்கு முன்னரே அறிந்திருந்தார். ஹவாயில் தங்கியிருந்த கடற்படைத் தளபதிக்கு முன்கூட்டியே அவர் இத்தகவலைத் தெரிவித்திருந்தார்.

- கொழும்பிலுள்ள பாதுகாப்புத் துறை ஆய்வாளர்கள் இத்தகவலை வெளியிட்டு இருக்கின்றனர்.

புலிகளின் எண்ணெய்க்கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அவர்கள் வெளியிட்டிருக்கும் புதிய தகவல்கள் வருமாறு:-

விமான எதிர்ப்பு ஏவுகணைகள், ஆட்லறி ஷெல்கள், ஆட்லறி ஏவுகணைகள் ஆகியவற்றுடன், விடுதலைப் புலிகளின் இரண்டு கப்பல்கள் இலங்கையை நோக்கி வந்துகொண்டிருக்கின்றன என்று கடற்படையின

(14ஆம் பக்கம் பார்க்க)

## புங்குடுதீவு கடற்கரையில் தலையற்ற ஆணின் சடலம்

யாழ்ப்பாணம்,ஜூன்23

புங்குடுதீவுக் கடற்கரைப் பகுதியில நேற்றுமுன்தினம் மாலை தலையற்ற நிலையில் ஆணின் சடலம் ஒன்று கரை ஒதுங்கியது.

சடலத்தைக் கண்ட அப்பகுதி மக்கள் பொலீஸாருக்கு கொடுத்த தகவலையடுத்து பொலீஸார் சடலத்தைப் பொறுப்பேற்று யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்று முற்பகல் ஒப்படைத்தனர்.

பச்சை நிற காற்சட்டை மற்றும் வெள்ளை நிற ரீசேட் ஆகியவற்றுடன சடலம் காணப்பட்டது.

சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-3-12-ר5)

### 'பொங்கு தமிழ்' ஏற்பாடுகள் மும்முரம்

## யாழ்.பல்கலைக்கழகப் பிரதேசம் எங்கும் அலங்காரம்! எழுச்சிக் கோலம்!

யாழ்ப்பாணம்,ஜூன்23


"நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காக இராணுவத்தினரே உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்" என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள 'பொங்கு தமிழ்' நிகழ்வையொட்டி யாழ். பல்கலைக் கழகப் பிரதேசம் விழாக் கோலம் பூண்டுள்ளது.

மஞ்சள், சிவப்புக் கொடிகள், பதாதைகள் கட்டப்பட்டு அப்பிரதேசம் எழுச்சிக் கோலம் பூண்டு காட்சியளிக்கிறது.

பொங்கு தமிழ் பற்றிய வர்ணச் சுவரொட்டிகள் சகல பகுதிகளிலும் ஒட்டப்பட்டிருக்கின்றன.

யாழ்.பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட பந்தலில் பொங்கு தமிழ் நிகழ்வைக் குறிக்கும் பெரிய பானை ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)



சகல சேமிப்புக் கணக்குகளுக்கும்
ரூபா. 300,000/- வரை
இலவச ஆயுட் காப்புறுதி

NSB

# தமிழ் மக்களின் வரலாறு அரச நூல்களில் இருட்டடிப்பு

## இளங்குமரன் கூறுகிறார்

கிளிநொச்சி,ஜூன்23

சிங்களவர்கள், சிங்கள வரலாற்றைக் கற்பது போல தமிழர்கள், தமிழ் வரலாற்றையே கற்க வேண்டுமென தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களுடைய பண்பாடு, வரலாறு, பூகோளரீதியான வாழ்வியல் அடையாளங்கள் அரச நூல்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன.

உண்மைகள் மறைக்கப்பட்டு, பொய்கள் புனையப்பட்டு எமது எச்சங்கள் மறைக்கப்பட்டுள்ளன. இதனால அரச நூல்களில் திரிவுபடுத்தப்பட்ட தமிழினத்தின் வரலாற்றை ஆதாரங்களுடன் நாம் நிரூபிக்க வேண்டிய நிலை உள்ளது. இலங்கைத் தீவில், தமிழர்கள் வந்தேறு குடிகள் என்றும் - சிங்களவர்கள் ஆதிக்குடிகள் என்றும் - கூறப்படுகிறது. தமிழரின் வரலாற்று எச்சங்கள் ஏராளம். சிங்களவரின் எச்சங்களும் வரலாறுகளுமே அரசினால் வெளியிடப்படும் புத்தகங்களில் காணப்படுகின்றன. தமிழர்கள் இந்த நாட்டை ஆண்டார்கள் என்பது திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். (ஐ-9)

# கட்டண நிலுவை உள்ளோரின் மின் இணைப்புகள் துண்டிப்பு

## மின்சாரசபை விரைவில் நடவடிக்கை

இரண்டாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட தொகையினை மின்கட்டண பட்டியல் நிலுவையாகக் கொண்டிருப்போரின் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட இருப்பதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நடைமுறை வலிகாமம் வடக்கு, தெற்கு பகுதிகளில் உடனடியாகவே நடைமுறைப்படுத்தப் படவுள்ளது என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை -

மின்சார சிக்கனத்தைப் பேணும் பொருட்டு 'கொம்பக்ற் புளோரசன்ட் (CFLS) மின்குமிழ்களை சந்தையில் குறைந்த விலையிலும் 12 மாத வட்டியற்ற கடனடிப்படையிலும் விநியோகிக்க மின்சாரசபை திட்டமிட்டுள்ளது.

மின்குமிழ்களுக்கு 2 வருட உத்தரவாதமும் உண்டு.

கட்டணத்தை பாக்கி இன்றி செலுத்திய இறுதி மாத மின்பட்டியலை உடையவர்கள், மின்பட்டியலில் பெயருடையவர்கள் மட்டும் மின்சார சபையுடன் தொடர்புகொண்டு, இம்மின் குமிழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ-4-ரி)

## மேல்கொத்மலை நீர்மின்திட்டப் போராட்டம்

# ஆறுமுகன் தொண்டமான் ஆவேசம்!

# இன்று தொண்டர்கள் சகிதம் வீதியில்!!

தலவாக்கலை,ஜூன்23

மேல்கொத்மலை நீர்மின் சக்தித் திட்டம் பயங்கரமானது. பிரதேச மக்களைப் பெரிதும் பாதிப்பது. அவர்களைப் பூண்டோடு அழிக்கக் கூடியது. சூழலைக் கெடுத்து மலையக மக்கள் அனைவரது நல்வாழ்க்கையுமே கேள்விக்குறியாக்குவது. இந்தத் திட்டம் உருப்பட விடமாட்டேன் என்று கூறி ஆவேசத்துடன் தொண்டர்கள் சகிதம் வீதி மறியல் போராட்டத்தில் குதித்தார் அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான்.

இ.தொ.கா. கூட்டம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பொழுது அதில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் இவ்வாறு வீராவேசமாகப் பேசினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

மேல்கொத்மலை மின்சாரத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் எமது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்த பின்பே அதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவித்தோம். எமது மக்கள் பாதிக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க எம்மால் முடியாது. எமது மககளுக்காக வீதியில் இறங்கிப் போராடவும் தயாராகிவிட்டோம்.

மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தை 33 ஆயிரம் கோடி ரூபா செலவில் அமைத்து 150 மெகா வோட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. உண்மையில், 60 மெகாவோட்ஸ் மின்சாரத்தை மட்டுமே அங்கு உற்பத்தி செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு செலவழிக்கப்படும் தொகையைக் கொண்டு 600 மெகாவோட்ஸ் அனல் மின்சாரத்தை திருகோணமலையில் உற்பத்தி செய்ய முடியுமென்று தெரிவிக்கப்படுகின்றது. எனவே, அந்தத் திட்டத்தை செயற்படுத்தட்டும். அதைவிடுத்து, ஆயிரக்கணக்கான மக்களைப் பாதிக்கும் மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தை மேற்கொள்வதன் நோக்கம் என்ன? எமது மக்களின் பலத்தையும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகையையும் குறைப்பதற்கா?

நுவரெலியா மாவட்டத்தில் ஆரம்பத்தில் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். ஆனால், இந்தத் தொகை இப்பொழுது 7 ஆகக் குறைந்து விட்டது. இது சிலருக்குப் புரியவில்லை. எமது மக்களைச் சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாவும் ஒடுக்குவதற்கு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

பிரதமர் ஜப்பான் சென்றிருந்த சமயம் மின்சக்தி அமைச்சர் கரு ஜயசூரிய இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான முயற்சியில் இறங்கியுள்ளார். இது தொடர்பாக விரைவில் பிரதமரைச் சந்தித்து பேசவுள்ளேன். தலைவர் தொண்டமான் அஹிம்சை ரீதியில் செயற்பட்டார். ஆனால், என்னால அப்படிச் செய்ய முடியாதிருக்கின்றது. உடனே எதிர் நடவடிக்கை எடுப்பதே எனது கொள்கை. மலையக மக்கள் அனைவரும் ஒன்றுபட்டால் வெற்றி நிச்சயம்.

- இவ்வாறு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் கூறினார். (ஐ)

# மாத்தறை, தங்காலை சிறைகளில் விசாரணையின்றி தமிழ் இளைஞர்கள்!

கொழும்பு,ஜூன்23

மாத்தறை, தங்காலை சிறைச்சாலைகளில் அநேக தமிழ் இளைஞர்கள் எவ்வித விசாரணைகளுமின்றி கடந்த பல மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச் செல்ல முற்பட்டனர் என இவர்கள் தென்பகுதியில் உள்ள சில வீடுகளிலிருந்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

தென்பகுதி சிறைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்கு எதிராக எவ்வித வழக்குகளும் இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை எனவும், இவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக அழைத்துச் சென்ற முகவர்கள் லட்சக்கணக்கில் இவர்களிடமிருந்து பணம் பெற்றுள்ளனர் எனவும் தெரிய வருகிறது. (ஐ)

# கடலில் கடற்படையின் ஒவ்வொரு கப்பலிலும் படகிலும் கண்காணிப்பாளர் இருக்க வேண்டும்

## கடலில் மீண்டும் பிரச்சினை ஏற்படாதிருக்க பாதுகாப்பு அமைச்சர் கூறும் யோசனை

கொழும்பு,ஜூன்23

கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடலில் மீண்டும் பிரச்சினை ஏற்படாதிருக்க கடற்படையின் ஒவ்வொரு கப்பலிலும், படகிலும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டும். இதற்கென தற்பொழுது இருக்கும் கண்காணிப்புக்குழுவினரின் எண்ணிக்கை போதுமானது அல்ல. எனவே, கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கோரியிருக்கிறேன்.

பாதுகாப்பு, போக்குவரத்து பெருந்தெருக்கள், சிவில் விமானசேவை அமைச்சர் திலக் மாரப்பன இவ்வாறு தெரிவித்திருக்கிறார். வாராந்த சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்திருக்கும் பேட்டியிலேயே அவர் இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

பேட்டியில் அமைச்சர் மாரப்பன மேலும் கூறியிருப்பதாவது:-

புலிகளின் கப்பலில் கடற்படையினர் ஏறவில்லை. புலி உறுப்பினர்களை கைது செய்யவும் இல்லை.

சம்பவம் நடைபெற்ற உடனேயே எனக்கு அறிவிக்காதிருக்கவும் எனக்கு முன்னர் ஜனாதிபதிக்கு அறிவித்திருப்பதும் இங்கு பிரச்சினையில்லை. அச்சந்தர்ப்பத்தில் கடற்படை மேற்கொண்ட நடவடிக்கை சரியானதா, விடுதலைப் புலிகள் கூறுவது உண்மையா, இன்றேல் கடற்படையினர் கூறுவது உண்மையா? என்பதே இங்குள்ள பிரச்சினையாகும்.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்திய கண்காணிப்புக் குழுவினர் அறிக்கையை ஒரு வாரத்துக்குள் கையளிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கை கிடைக்கும் வரை நான் தனியான விசாரணை மேற்கொள்ளும் எண்ணமில்லை.

அதிகாலை 3.55 மணியளவிலேயே கடற்படை புலிகளின் கப்பலை முதன்முதலாகக் கண்டிருக்கிறது. அதிகாலை 4.30 மணியளவிலேயே அது புலிகளின் கப்பல் என்பது உறுதிப்படுத்தப்பட்டது என்பது எனக்கு கிடைத்த தகவலிலிருந்து தெரிகிறது. காலை 5 மணியளவிலேயே வெடிவைப்பு நடந்திருக்கிறது. காலை 7 மணியளவிலேயே இச்சம்பவம் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது. கப்பலைக் கண்டவுடனேயே எனக்கு அறிவித்திருக்கலாம்.

- இவ்வாறு அவர் பேட்டியில் கூறியிருக்கிறார்.

# கட்டடப்பொருள் கூட்டுத்தாபன கல்முனைக் கிளைக்கு மூடுவிழா!

## தளபாடங்கள், பெயர் பலகை லொறியில் அகற்றப்பட்டன

கல்முனை,ஜூன்23

கல்முனை நகரில் சில மாதங்களுக்கு முன் வீடமைப்பு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்ட கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனக்கிளை மூடப்பட்டு விட்டது.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிராந்திய மக்களின் நலன் கருதி நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் விடுத்த வேண்டுகோளை ஏற்று அமைச்சர் ஆறுமுகன், கடந்த ஒக்டோபர் மாதம் இதனைத்திறந்து வைத்தார்.

எனினும், கட்டடப்பொருள்களைப் போதிய அளவில் கொண்டிராது பெயரளவில் இயங்கி வந்த இக் கிளையை மூடிவிடுமாறு கொழும்பிலுள்ள க.பொ. கூட்டுத்தாபன தலைமையகத்திலிருந்து வந்த உத்தரவின் பேரில் கடந்த புதன்கிழமை அம்பாறை அலுவலக அதிகாரிகளினால் இக்கிளை இழுத்து மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கிருந்த அலுவலகத் தளபாடங்கள் யாவும் லொறியில் ஏற்றிச்செல்லப்பட்டன. கூடவே பெயர்ப்பலகையும் கழற்றி எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

அம்பாறை கரையோரப் பிரதேசங்களில் பெரும் ஆரவாரங்களுடன் அமைச்சர்கள் வந்து காரியாலயங்களை திறந்து வைப்பதும், அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைப்பதும், பின்னர் அவை கைவிடப்படுவதும் சர்வ சாதாரண நிகழ்வுகளாகி விட்டன.

முன்னாள் வீடமைப்பு அமைச்சர் பேரியல் அஸ்ரப் கடந்த தேர்தல் காலத்தில் கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் திறந்து வைத்த வீடமைப்பு, அபிவிருத்தி அதிகாரசபையின் உபகாரியாலயங்கள் சில மாதங்களுக்கு முன்னர் மூடப்பட்டமை தெரிந்ததே. (ஐ)

# வடக்கு, கிழக்கு பொலீஸ் நிலையங்களின் பொலீஸாருக்கு தமிழ்மொழி பயிற்சி

## அரச மொழிகள் ஆணைக்குழு ஏற்பாடு

காரைதீவு,ஜூன்23

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 37 பொலீஸ் நிலையங்களில் கடமையாற்றும் மூன்றில் ஒரு பங்கு பொலீஸாருக்கு தமிழ்மொழி பயிற்றுவிக்கப்படவிருக்கிறது. அரச மொழிகள் ஆணைக்குழு இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாக அதன் தலைவர் டி.யூ.குணசேகர தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு, கிழக்கில் விசேட மொழிகள் திட்டமொன்றையும் அமுல்படுத்த ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. தமிழ் அரச ஊழியர்களுக்கு சிங்கள மொழியையும் சிங்கள அரச ஊழியர்களுக்கு தமிழ் மொழியையும் பயிற்றுவிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

பாடசாலைகளிலும்கூட தரம் 5 முதற்கொண்டு சிங்கள, தமிழ்மொழிகளைப் பயிற்றுவிக்க திட்டமிட்டு வருகிறோம். பிரதமர் ரணில் அதற்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் என்றும் டி.யூ.குணசேகர கூறினார்.

அமைச்சரவை மேற்படி திட்டத்தை அமுல்படுத்த தீர்மானித்துள்ளதோடு அதற்காக உத்தியோகத்தர் குழுவொன்றையும் நியமித்துள்ளதாகத் தெரியவருகிறது.

# பொ.ஐ.மு. எம்.பி. மீது நடவடிக்கை கோரி புத்தளத்தில் வீதி மறியல் போராட்டம்

## வாகனப் போக்குவரத்து பாதிப்பு; பொலீஸார் குவிப்பு

புத்தளம்,ஜூன்23

புத்தளம் நகரில் நேற்று வீதி மறியல் போராட்டமொன்று நடைபெற்றது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் ஆனமடுவ பகுதியில் அடாவடித்தனம் புரிந்த பொ.ஐ.மு. எம்பியொருவருக்கு எதிராக செய்யப்பட்ட முறைப்பாடுகள் குறித்து பொலீஸார் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்காததைக் கண்டித்தே இப்போராட்டம் நடைபெற்றது.

புத்தளம் மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பி. பாலிதரங்க பண்டார, புத்தளம் தொகுதி ஐ.தே.க. அமைப்பாளர் எம்.ஐ.பி.ஹாபி, வண்ணாத்திவில்லு பிரதேச சபைத் தலைவர் சாஹுல் ஹமீது ஆகியோரும் இச்வீதி மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

புத்தளம் தபால் நிலையச் சந்தியில் நடைபெற்ற இப் போராட்டத்துக்கு கருவலகஸ்வெவ விகாரையின் பிரதம குரு ஹாவில் பத்துவ இரத்தின ஜோதி தேரர் தலைமை தாங்கினார்.

வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டோர் போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்ய வீதிகளில் படுத்திருந்தனர். இதனால், வாகனங்கள் வேறு வீதி வழியாகத் திசை திருப்பப்பட்டன. போராட்டத்தில் ஈடுபட்டோர் கோஷங்களையும் எழுப்பினர்.

இதேவேளை, புத்தளம் நகரில் பெருந்தொகையான கலகம் அடக்கும் பொலீஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற கொலைகள், வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக பொலீஸார் நடவடிக்கை எடுக்கும்வரை போராட்டம் தொடருமென பாலித ரங்கபண்டார எம்பி இங்கு பேசும் போது தெரிவித்தார். (ஐ-9)

# திருமலை - மூதூர் இடையே மீண்டும் படகுச் சேவை

திருகோணமலைக்கும் மூதூருக்கும் இடையிலான 'சேருவில - 2' பயணிகள் படகுச் சேவை நேற்று ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாகத்தின் கீழ் இந்தச் சேவை இடம்பெறுகின்றது. இப்படகில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், துறைமுக அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் உட்பட 200 பேர் பயணம் செய்தனர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் திருகோணமலையில் இருந்து புறப்பட்ட இந்தப் படகு மூதூருக்குச் சென்று மீண்டும் திரும்பியுள்ளதாக துறைமுக அதிகாரசபையின் வதிவிட முகாமையாளர் தெரிவித்திருக்கிறார்.

இப்படகுச் சேவை நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்படவிருந்த போதிலும், தொழில்நுட்பக்கோளாறு காரணமாக நேற்றுவரை பிற்போடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

## விரிவுரைகள் வழமைபோல்

யாழ்ப்பாணம்,ஜூன்23

யாழ்.பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களுக்குமான விரிவுரைகள் யாவும் வழமைபோல் நடைபெறுவதால், அனைத்து பீட மாணவர்களும விரிவுரைகளுக்கு சமுகம் அளிக்க வேண்டும் என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ஐ-3)

## விபத்தில் இளைஞன் மரணம்!

வவுனியா,ஜூன்23

வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் இடம்பெற்ற லொறி விபத்தில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் கொழும்பிலிருந்து சிமெந்து ஏற்றிவந்த லொறி பாதையை விலகி தடம்புரண்டபோது அதில் பயணம் செய்த இளைஞர் ஒருவரே உடல் நசிந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

லொறி தடம்புரள்வதற்கு முன்னர் இளைஞன் லொறியை விட்டு பாய முற்பட்டதாகவும் - அப்போதே லொறி குடைசாய்ந்ததாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் உயிரிழந்த இளைஞனின் பெயர் சுப்பிரமணியம் எனத் தெரிவிக்கப்பட்டது.

# எண்ணெய்க் குழாய் வெடித்துச் சிதறியதால் நைஜீரியாவில் 105 பேர் கருகி மாண்டனர்!

லாகோஸ்,ஜூன்23

நைஜீரியாவில் அரச பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பாரிய பெற்றோலிய குழாய் வழியை துளையிட்டு எண்ணெய் திருடியபோது ஏற்பட்ட தீ அனர்த்தத்தில் 105இற்கும் மேற்பட்டவர்கள் கருகி மாண்டனர்.

நைஜீரியாவின் அபுஜா மாநிலத்தில் தலைநகர் உமுஹியாவில் கடந்த வியாழக்கிழமை இந்த அனர்த்தம் நடந்தது.

பெற்றோலியக் குழாய் வழியை துளையிட்ட எண்ணெய் திருடிகளான அக்கிராமவாசிகள் தம் வசமிருந்த அனைத்துக் கொள்கலன்களிலும், எண்ணெயை நிரப்பி எடுத்துச்செல்லும் போது ஏற்பட்ட அவதியினால் இந்த அனர்த்தம் நடந்துள்ளது.

இப்படி அவதியாக எண்ணெய் நிரப்பிய பரல் ஒன்றை ஏற்றிச் சென்ற மோட்டார் சைக்கிளில் இருந்து வெளியேறிய தீப்பொறியால் அப்பகுதி முழுவதும் திடீரெனத் தீப்பற்றியது.

தீ வேகமாகப் பரவியதை அடுத்து அங்கிருந்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் குழாய்கள் வெடித்துச் சிதறின. அதனுள் சென்றுகொண்டிருந்த எண்ணெய் மளமளவென நிலத்தில் கொட்டியது. இதனால், தீ கட்டுக்கடங்காமல் பற்றி எரிந்தது.

மூன்று நாள்களாகத் தொடர்ந்து பற்றி எரியும் தீயினால் பல வீடுகள் எரிந்து சாம்பராகியுள்ளன. தீ நேற்று வரை அணையவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தீ கட்டுங்கடங்காமல் பற்றி எரிவதால், மீட்புப் பணிகள் மந்த கதியிலேயே நடைபெறுகின்றன. தீயினுள் இன்னமும் எத்தனை பேர் சிக்குண்டுள்ளனர் என்பது தெரியவரவில்லை.

மோசமான எரிகாயங்களுடன் பலர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சினன்ஸோ தெரிவித்தார்.

எண்ணெய் திருடிகள் குழாயை சேதப்படுத்திய விவரம் இந்த அனர்த்தம் நிகழ்வதற்கு முன்னரே பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், அவர்கள் இந்த விடயத்தில் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்று புகார் கூறப்பட்டுள்ளது. இதனால், கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்தின் மீது விசாரணைகள் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகிறது.

உலகின் எட்டாவது பெரிய எண்ணெய் உற்பத்தி நாடான நைஜீரியாவில் குழாய்வழியை உடைத்து எண்ணெய் திருடுவது நீண்டநாள்களாக நடைபெறும் ஒன்றாகும் என செய்திகள் தெரிவிக்கின்றன.

உமுஹியாவில் கடந்த இரண்டு மாதங்களாக மேற்படி திருட்டு நடைபெற்றுவந்ததாக அறிவிக்கப்படுகிறது. 1998இல் டெல்ரா மாநிலத்தில் நடைபெற்ற இவ்வகை அனர்த்தமொன்றில் குழாய் வெடித்துச் சிதறியதில் ஆயிரம் பேர் மாண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நைஜீரியாவில் 5ஆயிரம் கிலோமீற்றர் நீளமான பெற்றோலியக் குழாய் வழி உள்ளது. இதில் பல இடங்களில் எண்ணெய் திருடிப் பிழைக்கும் தொழிலில் மக்கள் ஈடுபட்டுவருவதால் எரிபொருளுக்கு அங்கு மிகப்பெரும் கறுப்புச் சந்தை நிலவுகிறது. (எ)

# டி.எம்.சௌந்தரராஜன் தற்கொலை முயற்சி!

புதுடில்லி,ஜூன்23

தமிழ்த் திரையுலகில் பிரபல பழம்பெரும் பாடகரான டி.எம். சௌந்தரராஜன் நேற்றுமுன்தினம் இரவு தற்கொலை செய்ய முயற்சித்தார். தற்போது அவர் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

தமிழ் சினிமாவில் ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடியவர் டி.எம். சௌந்தரராஜன்.

எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஜெய்சங்கர், ரவிச்சந்திரன் உள்ளிட்ட பல முன்னணி நடிகர்களுக்குப் பின்னணிப் பாடல்களைப் பாடியுள்ளார்.

டி.எம்.சௌந்தரராஜன் பக்கவாத நோயால் அவதிப்பட்டு வந்தார். மனக் கவலையும் அவருக்கு இருந்தது என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம இரவு 9.30 மணிக்கு எரிசாராயத்தைக் குடித்துத் தற்கொலை செய்ய முயற்சி செய்துள்ளார்.

உடனடியாக அவரை கிரிம்ஸ் ரோட்டில் உள்ள அப்பலோ வைத்தியசாலையில் அவரது மனைவி சேர்த்தார். அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் அவர் கண்காணிக்கப்பட்டு வருகிறார்.

தனது கணவனின் தற்கொலை குறித்து சௌந்தரராஜனின் மனைவி சுமித்ரா கூறியதாவது:-

பெயரோடும், புகழோடும் இருந்த என் கணவருக்குத் திடீரென தாழ்வு மனப்பான்மையும், கோபமும் வந்துவிட்டன. குடும்பத்தில் எந்த கஷ்டமும் கிடையாது. சில நாள்களுக்கு முன்பு மதுரைக்குப் போய்வந்தார்.

நேரம் போகவில்லை என்றால் பழைய நண்பர்களைப் பார்த்துவிட்டு வரலாம். மாலையில் காரில் வெளியில் சென்று வரலாம் அப்போதுதான் மனது சந்தோஷமாக இருக்கும். ஆனால், வீட்டுக்குள்ளேயே அவர் முடங்கிக் கிடந்தார். நல்ல சாப்பாடு கிடைக்கவில்லை என்கிறார். மனதுக்குள்ளேயே அவருக்கு தாழ்வு. இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் இருப்பதனால் மாத்திரை சாப்பிட்டுவந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு என்ன மருந்து சாப்பிட்டார் என்று தெரியவில்லை. வாந்தி எடுத்து மயங்கி வீழ்ந்தார். உடனே அவரை வைத்தியசாலையில் சேர்த்தோம் இப்போது நன்றாக இருக்கிறார் - என்று கூறினார்.

எம்.ஜி.ஆர். படங்களில் 'நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்...', 'தூங்காதே தம்பி தூங்காதே...', திருடாதே பாப்பா திருடாதே...', 'ஓடும் மேகங்களே ஒரு சொல்கேளீரோ...', 'பல்லாக்கு வாங்கப் போனேன் ஊர் வலம் போக...' போன்ற எண்ணற்ற பாடல்களைப் பாடியுள்ளார்.

சிவாஜி படங்களில் பாடிய 'மலர்ந்தும் மலராத...', 'உன் கண்ணில் நீர் வழிந்தால்....', 'சட்டி சுட்டதடா கை விட்டதடா...', 'எங்கே நிம்மதி....' உள்ளிட்ட பல பாடல்கள் மனதில் ரீங்காரமாக ஒலிப்பவை.

டி.எம்.சௌந்தரராஜன் மதுரையைச் சேர்ந்தவர். 1952 இல் சினிமாவில் பாட ஆசைப்பட்டு சென்னை வந்தார். 1954இல் மந்திரிகுமாரி படத்தில் சுப்பையா என்ற நடிகருக்காக 'அன்னமிட்ட கையிலே கன்னகோல் சாத்தலாமா...' என்று தனது முதல் பாடலைப் பாடினார். மொத்தம் 30 ஆயிரம் பாடல்களை அவர் பாடி இருக்கிறார்.

ஏ.எல்.ராகவனுடன் சேர்ந்து 'கல்லும் கனியாகும்' என்ற படத்தைத் தயாரித்தார். 'அருணகிரிநாதர்', 'பட்டினத்தார்' ஆகிய படங்களில் கதாநாயகனாகவும் நடித்துள்ளார்.

1974இல் இவருக்கு கலைமாமணி விருது கிடைத்தது. தற்போது தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவராகவும் இருந்து வருகிறார். (ஐ)

# ஹமாஸ் இயக்க மூத்த தளபதி ஒருவர் யூதப் படைகளால் சுட்டுக்கொலை!

மேற்குக்கரை நகரான ஹெப்ரோனில் ஹமாஸ் இயக்கத் தளபதி ஒருவர் இஸ்ரேலியப் படையினரால் (யூதர்களால்) சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஹெப்ரோனிலுள்ள பள்ளிவாசலொன்றின் முன் காரிலிருந்து இறங்கிய போதே அப்துல்லா கவாஸ்மி என்ற இவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

அப்துல்லா இஸ்ரேலினால் கடுமையாகத் தேடப்பட்டு வந்தவரென்றும் கடந்தவாரம் ஜெருசலேமில் 17பேர் கொல்லப்படுவதற்கு காரணமாயிருந்த பஸ் குண்டுவெடிப்பு உட்பட பல தாக்குதல்களுக்கு காரணமாயிருந்தவர் என்றும் இஸ்ரேலிய வட்டாரங்கள் தெரிவித்தன.

பலஸ்தீனப் போராளிகளைத் தேடி அழிக்கும் அத்தகைய நடவடிக்கைகள் மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தைக் குழப்பிவிடும் என்றும், இஸ்ரேல் அதனை நிறுத்தவேண்டும் என்றும் பலஸ்தீனத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இதுபற்றி பலஸ்தீன அமைச்சர் யசர் அபெட்ரப்போ கூறுகையில் - "இஸ்ரேலியர்கள் அரசியற் கொலைகளை தொடர்கிறார்கள் என்பதற்கு இது ஒரு சான்று" என்று தெரிவித்தார்.

இதேவேளை, மத்தியகிழக்கு சமாதானத்திட்டத்தை வரைந்த அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, ஐ.நா. சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் நேற்று ஜோர்தானில் சந்தித்தனர். சமாதானத் திட்டத்தை எவ்வாறு காப்பாற்றலாம் என்பது பற்றி இவர்கள் ஆராய்ந்தனர் என்று கூறப்படுகிறது.

இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் நடத்திவரும் பழிவாங்கும தாக்குதல்களால் பலஸ்தீனர்கள் பலர் கொல்லப்பட்டுவருகின்றனர். இந்த நடவடிக்கைகளில் சர்வதேச ரீதியான கண்டனங்கள் இஸ்ரேலுக்குக் கிடைத்துள்ளன.

இந்நிலையில் -

ஜனாதிபதி புஷ்ஷின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் கொண்டோலிசாரைஸ் அடுத்த வாரம் மத்தியகிழக்கிற்கு விஜயம் செய்யவிருக்கிறார் என்று வாஷிங்ரன் செய்திகள் தெரிவிக்கின்றன. (எ)

# வீரப்பனைப் பிடிக்க படையினருக்கு செயற்கைக்கோள் தொலைபேசி வசதி!

சநதன் மரக்கடத்தல் வீரப்பனைப் பிடிக்க கர்நாடக அதிரடிப்படையினருக்கு செயற்கைக்கோள் தொலைபேசி வசதி அளிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

கர்நாடக முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணா தலைமையில் நேற்றுமுன்தினம் நடந்த விஷேட கூட்டத்தின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வீரப்பனைப் பிடிக்க இனிவரும் காலங்களில் என்னென்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து ஆராயப்பட்டது. கூட்டத்தின் முடிவில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

சிறப்பு அதிரடிப்படையினர் வேகமாகவும், திறமையாகவும் செயற்படுவதற்கு அவர்களுக்கு செயற்கைக்கோள் தொலைபேசி வசதி ஏற்படுத்திக் கொடுத்தல், அவனது நடமாட்டங்கள் அதிகமுள்ள மைசூர், மாண்டியா, சாம்ராஜ் ஆகிய மாவட்டங்களில் பணிபுரியும் அதிரடிப் படையினருக்கு கூடுதல்படி வழங்குதல், மேற்படி பகுதிகளுக்கு வரும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பை பலப்படுத்தல், வீரப்பனைப் பிடிக்க வனத்துறை பாதுகாப்பு அதிகாரிகள் அதிரடிப்படையினருடன் இணைந்து செயற்படுதல் என்ற முடிவுகள் எடுக்கப்பட்டன.(எ)

பொலீஸாரின் இம்சை தாங்கமுடியாமல்

# 'செக்ஸ்' டாக்டர் பிரகாஷ் வழக்கில் முக்கிய சாட்சியான ஆஷா மரணம்

சென்னை,ஜூன்23

இந்தியாவை ஒரு கலக்குக் கலக்கிய செக்ஸ் டாக்டர் பிரகாஷ் வழக்கின் முக்கிய சாட்சியான ஆஷா, கடந்த வாரம் தற்கொலை செய்யும் நோக்கில் பூச்சி மருந்து அருந்தி உயிருக்குப் போராடிய நிலையில் நேற்றுமுன்தினம் இரவு மரணமானார்.

செக்ஸ் டாக்டர் பிரகாஷ் வழக்கில் முக்கிய சாட்சியான சித்ரா, கால் வலிக்கு சிகிச்சை பெறச் சென்று பிரகாஷின் மாயவலையில் சிக்கிக் கொண்டவர். பின்னர் பிரகாஷ் தன் காமலீலைகளுக்கு சித்ராவை மிரட்டிப் பயன்படுத்திக்கொண்டார்.

ஒரு கட்டத்தில் பிரகாஷ் கைது செய்யப்படவே அவரைத் தொடர்ந்து சித்ராவும் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அதன் பிறகு சித்ரா மட்டும் பிணையில் விடுதலையானார். அதோடு பிரகாஷ்க்கு எதிரான சாட்சியாகவும் அவர் மாறிவிட்டார். இதனால், பிரகாஷ் பிணையில் கூட வெளியே வரமுடியாமல் போய்விட்டது.

இதற்கிடையில், பிரகாஷ் வழக்கில் சித்ராவின் தம்பி ஸ்டாலினின் மனைவி ஆஷாவையும் பொலீஸார் சாட்சியாகச் சேர்த்தனர். ஸ்டாலின் ஏற்கனவே ஒரு கொலை வழக்கில் கைதாகி சிறையில் உள்ளார்.

இந்தநிலையில், பிணையில் வெளியேவந்த ஸ்டாலின்மேல், மேலும் சில வழக்குகள் போடப்பட்டன. அது தொடர்பாக அவரைத் தேடி பொலீஸார் அடிக்கடி சித்ரா வீட்டுக்குச் செல்லத் தொடங்கினர். இதையடுத்து சித்ராவையும், ஆஷாவையும் பொலீஸார் அடிக்கடி இந்த வழக்குத் தொடர்பாக விசாரணை நடத்தி சித்திரவதை செய்தனர். பிரகாஷுக்கு எதிராகச் சாட்சி சொல்லாமல் விலகி விடுமாறு மிரட்டவே பொலீஸார் சித்ராவைக் கொடுமைப்படுத்தினர் என்று கூறப்படுகிறது.

பொலீஸ் கொடுமையில் இருந்து தப்பிக்க கடந்த ஞாயிற்றுக்கிழமை சித்ரா புரசைவாக்கத்தில் ஒரு வீடு பாரத்து அங்கு குடிபெயர்ந்தார். அங்கு திடீரென சித்ராவும் ஆஷாவும் தற்கொலை செய்துகொள்ளும் நோக்கத்தோடு பூச்சி மருந்து குடித்துவிட்டனர். திடீரென மயங்கி விழுந்த இவர்களை, சித்ராவின் தாயார் மரகதம் சென்னை அரச மருத்துவமனையில் சேர்த்தார். தமிழகத்தையே உலுக்கிய பிரகாஷ் வழக்கில் முக்கிய சாட்சியான சித்ரா தற்கொலை செய்ய முயன்றது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில், மருத்துமனையில் ஆஷா சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் இரவு இறந்தார். ஆஷாவின் உடல் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சித்ரா உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

ஆஷா சாவுக்கு பொலீஸே காரணம் என்று கூறும் சித்ராவின் தாயார், கண்ணீமல்க நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

எனது மகள் சித்ராவை பொலீஸார் டாக்டர் பிரகாஷ் வழக்கில் தொடர்புபடுத்தி தினமும் விசாரணை நடத்தி சித்திரவதை செய்தனர். பொலீஸாரின் தொல்லை தாங்காமல் சித்ரா தானாக நீதிமன்றில் வந்து சரணடைந்தார். இதைத் தொடர்ந்து பொலீஸார் நள்ளிரவில் வீட்டுக்கு வந்து எனது மகளை கையைப் பிடித்து இழுத்து சித்திரவதை செய்து வந்தனர். ஆண் துணை இல்லாமல் நாங்கள் பொலீஸாரை எதிர்த்து எதுவும் கூறமுடியவில்லை. இந்த நிலையில், ஒரு கொலை வழக்கு தொடர்பாக எனது மகன் ஸ்டாலினை பொலீஸார் சித்திரவதை செய்து விசாரணை நடத்தினர். அவரையும் கைது செய்து வேலூர் சிறையில் அடைத்து வைத்துள்ளனர். இதைத் தொடர்ந்து கணவர் மீதான கொலை வழக்கு பற்றி விசாரணை நடத்துவதாகக் கூறி அவரது மனைவி ஆஷாவிடம் பொலீஸார் விசாரணை நடத்தி துன்புறுத்தினர்.

கணவன் சிறைக்குச் சென்ற கவலையும் குழந்தைகளை எப்படிக் காப்பாற்றுவது என்ற கவலையுடன் தினமும் செத்துப் பிழைத்து வந்தாள் ஆஷா. கணவனுக்குத் தண்டனை கொடுத்துவிட்டால் என்ன செய்வது என்றும் ஆஷாவிற்குப் பயம் ஏற்பட்டது. பொலீஸாரின் தொல்லை தாங்காமல் ஆஷாவும், சித்ராவும் சேர்ந்து பூச்சி மருந்து சாப்பிட்டுவிட்டனர். இதற்காக ஒரு மருத்துவமனையில் சிகிச்சைக்காகக் கொண்டு சென்றேன். மருத்துவமனையில் ஆஷா குணமடைந்துவந்தாள். தனியார் மருத்துவமனையில் செலவு செய்ய கையில் பணம் இல்லை. இதனால் அரச மருத்துவமனையில் ஆஷாவைச் சேர்த்தேன். அங்கு அவள் குணமடைந்ததாகக் கூறினார்கள். ஆனால் திடீரென்று மூச்சுத் திணறி இறந்து போய்விட்டாள் - என்றார். (எ)

# ஜனாதிபதியைச் சந்திக்க முயன்ற பெண்களை இந்தியப் பொலீஸ் நிர்வாணமாக்கி சித்திரவதை!

சென்னை,ஜூன்23

இந்திய ஜனாதிபதியைச் சந்திக்க முயன்ற பெண்களை பொலீஸார் நிர்வாணமாக்கி சித்திரவதை செய்தனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தமிழகப் பெண்கள் எழுச்சி அமைப்பு சார்பில் பொடா சட்ட எதிர்ப்பு மாநாடு சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த மாநாட்டில் தமிழ்நாடு 'தலித்' பெண்கள் அமைப்பைச் சேர்ந்த இரண்டு பெண்கள் மேற்படி குற்றச்சாட்டைத் தெரிவித்தனர்.

அவர்கள் கூறியதாவது:-

திருவள்ளுவர் மாவட்டம் திருத்தணி வட்டம் ரங்காபுரம் கிராமத்தில் தலித் மக்களின் குழந்தைகள் பல ஆண்டுகளாக பாடசாலைக்குச் சென்ற பாதை முள்மரங்களைப் போட்டு மூடப்பட்டுள்ளது.

கடந்த 19ஆம் திகதி காஞ்சிபுரம் வந்த ஜனாதிபதி அப்துல்கலாமிடம் இது பற்றி புகார் மனுக்கொடுக்க விரும்பினோம். சிறுவர்களையும் அழைத்துக் கொண்டு 25 தலித் பெண்கள் அங்கு சென்றோம். காஞ்சிபுரம் பொலீஸார் எங்களைப் பிடித்து சிவ காஞ்சி பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். அங்கு விசாரணை என்ற பெயரில் நிர்வாணப்படுத்தினர். பெண் பொலீஸாரே இந்தக் கொடுமையைச் செய்தனர்.

மேலும் கீழ்த்தரமான, கூச வைக்கும் சொற்களால் சித்திரவதை செய்தனா. ஆண் பொலீஸார் பூட்ஸ் காலால் வயிற்றில் ஏறி உதைத்தனர்; அழுத குழந்கைளை கத்தியைக் காட்டி மிரட்டினர்; பொடா சட்டத்தில் கைது செய்வோம் என்றும், விபசாரம், திருட்டு வழங்கில் உள்ளே தள்ளுவோம் என்றும் மிரட்டினர் பின்னர் விட்டுவிட்டனர் - என்றனர்.

இந்த மாநாட்டில் விடுதலை சிறுத்தைகள் அமைப்பாளர் திருமாவளவன், ஐ.ஏ.எஸ் அதிகாரி சிவகாமி, தலித் அமைப்புத் தலைவி பாத்திமா, விடுதலை ராஜேந்திரம் உட்பட பலர் உரைநிகழ்த்தினர். (எ)

# WANTED

**For immediate employment**

- ★ Welders
- ★ Fitters
- ★ Fabricators
- ★ Refregeration Technician

*Applications must reach on or before 26th June, 2003*

Managing Director

**STAR INDUSTRIAL SERVICES (PVT) Ltd.**

**124, Rasavinthoddam Road,**


**Nallur, Jaffna.**

(19376)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 04 - 06 - 1931



மறைவு 24 - 05 - 2003

அமரர்

## சுப்பிரமணியம் சிவயோகநாதன்

**பாசத்தின் சுமையோடு பறந்து சென்ற அப்பாவே!**
**நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள்**
**மட்டும் மறையாது.**

இன்று (23-06-2003) திங்கட்கிழமை எமதில்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழ்கின்ற மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கைதடி வடக்கு,*
*கைதடி.*

(19299)

**- குடும்பத்தினர்.**



# 3ஆம் ஆண்டு நினைவு

மண்ணில் 10 - 03 - 1910



விண்ணில் 23 - 06 - 2000

## ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை

(கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய மூப்பர்)

**உயிர்ப்பும் உயிரும் நானே**
**என்னில் விசுவாசம் கொள்பவன்**
**இறப்பினும் வாழ்வான். (யோவா 11:25)**

*155ஆம் கட்டை,*
*கண்டி வீதி,*
*கிளிநொச்சி.*

(19382)

மகள்

க.மங்கையர்க்கரசி.


# கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்23

நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல திணைக்களத் தலைவர்களையும், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் எஸ்.பேரானந்தன் கேட்டுள்ளார். (எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்23

யாழ்.அத்தியடி கிராம அலுவலர் (ஜே/78) பிரிவின் புனர்வாழ்வு புனரமைப்புத் தொடர்பான கூட்டம் ஒன்று எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள ஆயுர்வேத கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் குழுத்தெரிவும் இடம்பெறவுள்ளதால் சகல மக்களையும் கலந்துகொள்ளுமாறு அத்தியடி கிராம சேவையாளராக நியமிக்கப்பட்டுள்ள எஸ்.ஜெயக்குமார் கேட்டுள்ளார். (எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்23

அச்சுவேலி உலவிற்குளம் சித்தி விநாயகர் ஆலய இந்து இளைஞர் மன்றத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் இன்று பிற்பகல் 4 மணியளவில் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாலபண்டிதர் சிவஸ்ரீ கு.வை. விருத்தகிரீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பியும் சிறப்புவிருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் எஸ் ஸ்ரீநிவாசனும் கலந்துகொள்வர்.(எ-12)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் பொ.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.


இந்த நிகழ்வுகளில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் தம்பதியினர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை தொழில் நியாயச் சபையின் தலைவரும், கொழும்பு மேலதிக நீதிவான் மனோ.ஸ்ரீதரன் நிகழ்த்துவார். சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் கா.சந்திரபாலனும், கௌரவ விருந்தினராக சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும் கலந்துகொள்வர். (எ)

## திருடன் அகப்பட்டான்

கொழும்புத்துறை,ஜூன்23

யாழ். இராசாவின் தோட்டப் பகுதி வீடொன்றினுள் நள்ளிரவு வேளை புகுந்து திருட முயன்றதாகக் கூறப்படும் நபரொருவர் வீட்டில் உள்ளவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். கடந்த வியாழக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (எ-10-30)


முதன் முறையாக

தொழிற்சாலையின்

5 வருட உத்தரவாதம்

Access Graphics

License No : 50445

ஏக முகவர்கள்

சென்ற் அந்தனிஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்

516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5


பெக்ஸ்: 446554

WATERTEC

முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.






முதன் முறையாக

தொழிற்சாலையின்

5 வருட உத்தரவாதம்

Access Graphics

License No : 50445

ஏக முகவர்கள்

சென்ற் அந்தனிஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்

516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5

பெக்ஸ்: 446554

WATERTEC

முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



# 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 1930 - 03 - 02



ஆண்டவன் அடியில் 2003 - 05 - 24

திருமதி

## சிவசம்பு சிதம்பரம்

*(திருப்பதி)*

**24.05.2003** சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குல விளக்கு திருமதி சிவசம்பு சிதம்பரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று **(23-06-2003)** திங்கட்கிழமை எமது இல்லத்தில் நிகழவிருப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று நடைபெறவிருப்பதால் இவற்றில் கலந்து மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பத்தமேனி,*
*அச்சுவேலி.*

(சி-28505)

**மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**



# வெளிவந்து விட்டது

**இலங்கையிலேயே முன்மாதிரியாக கல்வியியல், உளவியல் கோட்பாடுகளில் இருந்து நடைமுறைக்கும் - நடைமுறைகளில் இருந்து செயன் முறைகளுக்கும் வழிகாட்டும் புதிய ஆக்கம்:**

## நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள்

## MODERN METHODS OF LEARNING AND TEACHING

நூலாசிரியர் - கல்வியியல் ஆய்வாளரும் கல்வி அபிவிருத்தி நடைமுறையாளருமான

## திரு. பாலசுப்பிரமணியம் தனபாலன்

[B.A.(Cey.), PGDE (Merit), M.Phil in Education]

உப பீடாதிபதி கல்வியும் தரமேம்பாடும்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

- ★ ஆசிரியத்தில் கற்றலும் கற்பித்தலும், கற்றல் - கற்பித்தல் பிரச்சினைகளும் தீர்வுகளும்
- ★ கற்றல் பரிமாணங்களும் முறையியல்களும், கற்றல் சந்தர்ப்பங்கள் - கக்னே
- ★ கற்றலை வினைத்திறனாக்கல், கற்பித்தல் செயலொழுங்கு முகாமைத்துவ முறையியல்கள்
- ★ நவீன ஆக்கபூர்வக் கற்றலுக்கான சுதந்திரக் கோட்பாடும் நடைமுறைகளும், விடய ஆய்வு நிகழ்வுக் கற்கைகள்
- ★ கற்பவர் மைய அணுகுமுறை, கல்வியியல் ஆய்வு, பாடசாலைகளில் கலைத்திட்டப் பிரயோகம், கல்வியின் பூரணத்துவம் பாரிய காட்சி ஆகிய நவீன அம்சங்கள் அடங்கிய நூல்.
- ★ பாடசாலை ஆசிரியர், அதிபர், ஆசிரிய கல்வி வாண்மைத்துவப் பயில்வுகளை மேற்கொள்ளும் அனைவருக்கும் உகந்த அரிய நூல்

**இலங்கை முழுவதற்குமான ஏக விநியோகஸ்தர்:**

## ஸ்ரீலங்கா புத்தகசாலை

234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-222 2573

(19349)

# உதயன்

## முழுப் பொறுப்பையும் அரசே ஏற்கவேண்டும்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க லண்டன் சென்றுள்ளார். புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் முக்கிய அமைச்சர்கள் இருவரும் - பேராசிரியர் பீரிஸும் மிலிந்த மொறகொடவும் கூடச் சென்றுள்ளார்கள்.

பிரதமர் முக்கியமாகச் சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனையும் அழைத்துச் சென்றுள்ளார்.

அதற்குக் காரணம் பிரதமர் லண்டனிலே மிகச் சிறந்த சட்ட நிபுணர்களைச் சந்தித்து, அவர்களுடன் வடக்கு - கிழக்கிற்குத் தாம் அமைக்க உத்தேசித்திருக்கும் இடைக்கால நிர்வாக அமைப்புக் குறித்துக் கலந்துரையாடி அவர்களின் சட்ட ஆலோசனைகளைப் பெறவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களில் இலங்கையின் சட்டமா அதிபரும் நேரில் கலந்துகொள்வது பயனுள்ளதாகவும், இங்கே இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தும் பணியை இலகுவாக்குவதாகவும் அமையும் என்று பிரதமர் கருதுகிறார்.

விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுமேசைக்கு வரவழைப்பதற்காக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தப் பிரதமர் தயாராக உள்ளார். அந்தக் கட்டமைப்பு அரசமைப்புக்கு உட்பட்டதாகவும், வடக்கு, கிழக்கிலுள்ள எல்லாச் சமூகத்தினரதும் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடியதாகவும் இருக்கவேண்டும் என்று பிரதமர் விரும்புகிறார்.

விடுதலைப் புலிகள் கோருவது அரசியல், நிர்வாக அதிகாரங்களைக் கொண்ட இடைக்காலக் கட்டமைப்பு. அரசியல் அதிகாரங்களைக் கொண்டதாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு இருக்கவேண்டுமானால், அப்படிப்பட்ட ஓர் அமைப்பை அரசமைப்புக்கு அமைவாகவே ஏற்படுத்த முடியும் என்பது அரசின் கருத்து.

இன்றைய ஒற்றையாட்சி அரசமைப்பில் ஆறாவது திருத்தம் (நாட்டுப் பிரிவினைக்கு எதிரானது) இருக்கும்வரை அந்த அரசமைப்பை ஏற்றுச் சத்தியப்பிரமாணம் செய்து அரசமைப்புக்கு உட்பட்ட எந்தவோர் அமைப்பிலும் இணைந்து செயலாற்றும் நிலையில் விடுதலைப் புலிகள் இல்லை. அது அவர்களின் கொள்கை விவகாரம்.

அரசியல் அதிகாரம் இல்லாத ஓர் அமைப்பில் இருந்து கொண்டு உருப்படியான காரியம் எதையும் செய்யமுடியாது என்பதிலும் புலிகள் உறுதியாக இருக்கிறார்கள்.

இதனால்தான் சிக்கல். இதிலிருந்து விடுபடுவதற்குத்தான் பிரதமர் லண்டனில் சட்டநிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறப்போகிறார்.

லண்டனுக்குச்செல்லும் முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வார இறுதியில் ஜனாதிபதியைச் சந்தித்து டோக்கியோ மாநாடு, பாதுகாப்பு நிலைமை உட்படப் பல விடயங்களுடன் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பற்றியும் கலந்துரையாடினார்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பற்றி ஜனாதிபதி என்ன கூறினார் என்று ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

அவர் தனது பழைய பல்லவியையே பாடினார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்களிலிருந்து செய்தி கசிந்திருக்கிறது.

அதாவது, விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வேண்டுமானால் அவர்கள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்று ஜனாதிபதி முக்கியமாக வலியுறுத்தினார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்களிலிருந்து அறியவருகிறது.

ஆயுதங்களைக் கைவிடுவதற்கு இது ஏற்ற காலம் அல்ல என்று புலிகள் ஏற்கனவே தெரிவித்துவிட்டார்கள்.

தாய்லாந்தின் நொக்கம்பத்தோமில் நடந்த நான்காவது சுற்றுப் பேச்சுகளின் முடிவில் புலிகளின் மதியுரைஞரும், பேச்சுக் குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கம் சந்தேகத்துக்கிடமின்றி விடயத்தைத் தெளிவுபடுத்தினார்.

அவர் கூறியவற்றின் சாரம் வருமாறு:-

"ஐ.ஆர்.ஏ. அல்லது பலஸ்தீன விடுதலை அமைப்புப் போன்று புலிகளும் சிறியரக ஆயுதங்களுடன் கூடிய ஓர் அமைப்பு என்று பலர் தப்புக் கணக்குப் போட்டுள்ளனர்.

"புலிகள் பெரும் இராணுவ இயந்திரத்தை, பீரங்கிகள், டாங்கிகள் போன்ற கனரக ஆயுதங்கள் சகிதம் கடந்த 20 வருடங்களாக யுத்தத்தை மேற்கொண்டுவரும் பெரும் மரபுவழி இராணுவக் கட்டமைப்பை உடைய ஒரு விசாலமான இயக்கம் ஆகும்.

"என்றாலும், பிரச்சினைக்குத் தீர்வு காண யுத்தத்தை நிறுத்தி பேச்சைத் தொடங்கினோம்.

"எங்களது சமூக பொருளாதார சரித்திர நிலைமைகளுக்கு ஏற்ப இறுதித் தீர்வொன்றை நாம் கண்டாகவேண்டும். அதற்குக் காலம் எடுக்கும்.

"இறுதியாக இவை எல்லாவற்றுக்கும் அமைவாக, புதிய அரசியல் முறைமைகளுக்கு அமைவாக, புதிய அரசமைப்பு ஒன்றை நாம் ஏற்படுத்தவேண்டும். அதுவரை ஆயுதக் களைவு என்ற பேச்சுக்கே இடமில்லை.

"நிரந்தரத் தீர்வு ஒன்று கிட்டுவதற்கு முன்னர் எமது உறுப்பினர்களின் ஆயுதங்களைக் களைவதோ, எமது ஆயுதங்களைச் செயல் இழக்கச் செய்வதோ தற்கொலை செய்வதற்கு ஒப்பானதாகும்.

"எமது இராணுவ பலம்தான் எமது மக்களின் பலம். அது தமிழர்களின் பேரம்பேசும் பலம். எமது மக்களின் பாதுகாப்பு உபகரணமும் அதுதான். எனவே, இப்போதைய நிலையில் ஆயுதக் களைவு என்ற கேள்வி எழவில்லை. அதற்காக மீண்டும் வன்முறைக்குப் போவதற்காக இராணுவம் உள்ளது என்ற அர்த்தம் அல்ல" - இப்படி அன்ரன் பாலசிங்கம் தெளிவுபடுத்தினார்.

என்றாலும், ஆயுதக் கையளிப்பை வற்புறுத்தியோ அல்லது வேறு காரணங்களைக் காட்டியோ அரசியல் நிர்வாகத்தோடு கூடிய இடைக்கால கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவது தாமதமாகுமானால் மக்களின் மன உணர்வுகளுக்கு மதிப்பளித்து புலிகள் தமது விருப்பத்துக்கு மாறாகப் பழைய பாதைக்குத் திரும்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அதற்கு அரசே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

## போரினால் கட்டடங்கள் தரைமட்டம்; 5ஆஸ்பத்திரிகள் இயங்கவில்லை

### கிளிநொச்சி சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

கிளிநொச்சி,ஜூன்23

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள 13 அரசாங்க வைத்தியசாலைகளில் 8 வைத்தியசாலைகள் மட்டுமே தற்பொழுது செயற்பட்டு வருவதாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. அத்துடன், வைத்திய உபகரணங்களும் இல்லை. இதனாலேயே வைத்தியசாலைகளை மீள இயக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும் - அவர் குறிப்பிட்டார்.

பளை றும் பூநகரிப் பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருகின்றபோதிலும் அங்குள்ள சுற்றயல் கூறு வைத்தியசாலைகளை மீள இயக்குவதற்கு எம்மிடம் போதிய வளங்கள் இல்லை.

அத்துடன், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 50 வைத்தியர்கள் தேவைப்படுகின்ற நிலையில் 13 வைத்தியர்கள் மட்டுமே பணியாற்றி வருகின்றனர். இதேபோன்று தாதியர்களுக்கும் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது.

இதேவேளை -

உலக வங்கி, ஜப்பான் அரசு மற்றும் புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு ஆகியவற்றின் உதவியுடன் சுமார் 4 கோடி ரூபா செலவில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார்.

(எ-10-ரி)

## நாட்டு நடப்பு

### விதியினை வென்றார் யாரோ!

பத்மினியை மணந்து அவன்
பதினாறு நாள் ஆகவில்லை
மெத்தவே தலையிடி என்று
மோகனும் முனு முனுக்க
உத்தமி கூட்டிக் கொண்டு
உடன் சென்றாள் 'டாக்டரிடம்'
மெத்தவே 'பிரசர்' என்றார்
மேலும் சலத்தினில் சீனி என்றார்
பத்திரமாய்ப் பாருமென்றார்
பழுதுண்டு 'கிட்னி' என்றார்
பத்தியம் மிகக் கடுமை
படம் பிடிக்க வேண்டுமென்றார்
புத்திரப் பேறோ உமக்கு
பூச்சியம் என்றே சொன்னார்
உத்தமி சிரித்தே சொன்னாள்
ஊழ்தனை வென்றார் யாரோ?
எத்தனை பேசிவந்த போதும்
ஏந்திழை இவனைச் செய்தாள்.

- விகடகவி.

## பொங்கும் தமிழ் எங்கும் தங்குக!

### கனடா தமிழ் மாணவர்கள் அறிக்கை

ரொரன்டோ,ஜூன்23

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்ற 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து கனடா தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள், பட்டதாரிகளை உள்ளடக்கிய கனடா தமிழர் தேசிய அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடல்கடந்து வந்தும் உங்கள் நினைவுகளோடு வாழும் எம் இனிய புலம்பெயர் மக்களின் சார்பாக இந்த வாழ்த்துரையை அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். பல்லாயிரம் ஆண்டு காலமாய் அடிமைப்பட்டுக் கிடந்த எம் இனம் இன்று சுதந்திரதேவியின் வருகைக்காய் வழிமேல் விழிவைத்து காத்திருக்கின்றது.

இவ்வுலகமே எம் இனத்தின் துன்பங்களை வேடிக்கை பார்த்த போது அவர்களின் துன்பங்களையும் அவர்களின் அபிலாஷைகளையும் எதிரியின் முற்றுகைக்குள்ளேயிருந்தும் வெளியுலகிற்கு தெரியப்படுத்தியவர்கள் நீங்கள். இந்தப் பொங்குதமிழ் நிகழ்வில் நாமும் பங்கேற்கமுடியவில்லை என்கின்ற கவலை எமக்கு இருந்தாலும், எம்முணர்வும் எம் ஆதரவும் உங்களுக்கு எப்போதும் உண்டு என்பதை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்திக்கொள்கின்றோம்.

எம்மினத்தின் அடையாளத்தையும், எம்மக்களின் பிரதிநிதிகளையும் எம் தேசத்தின் தலைமையையும் இந்த உலகமே திரண்டு நின்று புறக்கணித்தாலும், மாணவர் சக்தியான நீங்களும் புலம்பெயர்ந்த நாங்களும் அவர்களுக்காக இருக்கும் வரை எம் இனத்தை யாராலும் அசைக்க முடியாது என்பதனை இதன்மூலம் உறுதிப்படுத்துகின்றோம். தடைகள் பல வந்தாலும் உங்கள் பொங்குதமிழ் இனிதே நடக்கட்டும். அதனை இந்த உலகமே மீண்டும் ஒருமுறை தன் கண்ணைத் திறந்து பார்க்கட்டும்.

நாம் இங்கே தேசிய நீரோட்டத்தில் கலந்துவிட்டோம் என்று நீங்கள் கவலைகொள்ளத் தேவையில்லை. ஒரு தாயின் பாலைக் குடித்து வளர்ந்தவர்கள் எல்லோரும் தேசத்தின் மேல் அளவு கடந்த அன்பு வைத்திருக்கின்றார்கள். எங்களின் ஆதரவு இருக்கும்வரை யாரும் விலைபேசிடமுடியாத தலைமை இருக்கும் வரை, எதையும் துணிந்து நின்று முன்னே செல்லும் நீங்கள் இருக்கும்வரை யாரும் எம்மை இனிமேலும் அடக்கிட முடியாது. இந்தப் பொங்கு தமிழ் ஒழுங்கே அமைந்து பின் அதுவே உலக நாடுகளில் பரவி எம் இனத்தின் அபிலாஷைகளை கட்டியம் கூறிட வாழ்த்துகின்றோம் - இவ்வாறு அறிக்கை கூறுகிறது.(ஐ)

## கிளிநொச்சி நீதிமன்றில் விநோதமான வழக்கு

தனது குழந்தையை பிறந்த அன்றே வேறொரு தம்பதியினரிடம் கொடுத்த தாய் ஒருவர், நான்கு வருடங்களுக்குப் பின்னர் தனது குழந்தையை மீண்டும் தன்னிடம் பெற்றுத்தருமாறு கோரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் இந்த விநோதமான வழக்கு நடைபெற்றுள்ளது.

இந்த வழக்கை விரிவாக விசாரணை செய்த கிளிநொச்சி மாவட்ட நீதியாளர் செந்தூர் சம்பந்தப்பட்ட குழந்தையின் விருப்பப்படி அதனை வளர்ப்புத் தாயுடன் இருப்பதற்கு அனுமதி வழங்கினார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

காதல் உறவு காரணமாகப் பிறந்த குழந்தையை குறித்த யுவதி, ஊர்மக்களின் ஏளனத்தில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் வகையில் அன்றைய தினமே ஏற்கனவே நீண்ட காலமாக குழந்தைகள் இன்றி இருந்த தம்பதியினருக்கு கொடுத்திருந்தார்.

மேற்படி பெண்ணின் காதலனின் அச்சுறுத்தலினாலேயே அவர் தனது குழந்தையை வேறொரு தம்பதியினரிடம் ஒப்படைத்தார் என்று கூறப்பட்டது.

இச்சம்பவம் நடைபெற்று நான்கு வருடங்களுக்குப் பின்னரும் தனது காதலன் தன்னை திருமணம் செய்துகொள்ள மறுப்புத் தெரிவித்ததால் மேற்படி பெண் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

தனது வழக்கு வெற்றிபெற வேண்டும் என்பதற்காக அந்தப பெண் தனது காதலனுக்கும் தனக்கும் இடையில் நான்கு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட உறவினால் ஆண்குழந்தை ஒன்று பிறந்தது எனவும் -

அதனை வேறொரு தம்பதியினரிடம் ஒப்படைத்ததாகவும் நீதியாளரிடம் கூறினார்.

தனது பிள்ளையை மீண்டும் தன்னிடம் சேர்ப்பிக்க உதவும்படியும் அப்பெண் நீதிமன்றில் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து, சம்பந்தப்பட்ட குழந்தையையும், அக் குழந்தையின் வளர்ப்புத் தாயையும் மன்றுக்கு வரவழைத்த நீதியாளர் அவர்கள் அனைவரின் முன்னிலையிலும் குழந்தையின் விருப்பத்தைக் கேட்டார். அந்தக் குழந்தை தனது வளர்ப்புத் தாயுடன் செல்வதற்கே விருப்பம் தெரிவித்தது.

இதனை அடுத்து நீதியாளர் தமது தீர்ப்பில்:-

தனது காதலனுடனான உறவில் பெற்ற குழந்தையை வேறொருவரிடம் கொடுத்துவிட்டு, தற்போது தனது காதலன் தன்னை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதற்காக மேற்படி பெண், குழந்தைக்கு உரிமை கோரினாரே தவிர குழந்தை மீதுள்ள உண்மையான பாசத்தினால் அல்ல என்பதனாலும் -

குழந்தை தனது வளர்ப்புத் தாயுடன் இருக்கவே விரும்புவதனாலும் குழந்தை தொடர்ந்தும் வளர்ப்புத் தாயுடனேயே இருக்கவேண்டும் என்றும் - தெரிவித்தார்.

குழந்தையின் பெற்ற தாயை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று அவரது காதலனுக்கு நீதியாளர் உத்தரவு பிறப்பித்தார். (எ-4-ரி)

### நாளை

ஆனி 09
செவ்வாய்க்கிழமை
(24.06.2003)
திதி : தசமி
பிற்பகல் 2.01 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
பின்னிரவு 1.49 வரை.
சுபநேரம் : 10.25 - 11.55
ராகுகாலம் : 2.55 - 4.25
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

ஓயாது பேசிக்கொண்டிருப்பவன் தன் உள்ளத்தில் ஒன்றுமில்லையென்பதைக் காட்டிக் கொள்ளுகின்றான்.

## ஆசிரிய கலாசாலைகளில் ஒன்று விரைவில் மூடப்படும் அபாயம்!

### பயிற்சிக்கு விண்ணப்பித்தோர் எண்ணிக்கை குறைவாம்

யாழ.மாவட்டத்தில் உள்ள இரு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் ஒன்று மூடப்படலாம். இதற்கான முன்முயற்சிகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இடம்பெயர்ந்த நிலையில் செயற்படும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு, புதிதாக ஆசிரிய மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதிலும் இரண்டு இலக்கத் தொகையில் மட்டுமே மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்றும் -

சில பாடத்துறைக்கு ஒருவர், இருவர் விண்ணப்பித்திருப்பதால் தொடர்ந்து கலாசாலையை செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் - தெரியவருகிறது.

இதனால் குறிப்பிட்ட ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு 2003ஆம் கல்வி ஆண்டில் சேர விண்ணப்பித்த பயிற்சி ஆசிரியர்களை வேறு கலாசாலைகளுக்கு இடமாற்றம் செய்யத் தீர்மானிக்கப்பட்டிருப்பதுடன் -

விரிவுரையாளர்களை கடமையாற்ற விரும்பும் இடம்தொடர்பாகவும் விருப்பத்தை தெரிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளதாகவும் - கூறப்பட்டது. புதிதாக நியமிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களின் பயிற்சித் திட்டம் தொடர்பான தீர்மானத்தில் மாற்றம் ஏற்படாத இடத்து குறித்த ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மூடப்படுவது முடிவாகிவிட்டது என அறியவருகிறது. (எ-11)

# ஆறாத துயரில் ஆனது 31ஆம் நாள்



அமரர்
கலாவித்தகர் உயர்திருமதி

## மேகலா வசந்தகுமார்

B.A.(Hons.), P.G.Dip. in Edu.
(ஆசிரியர், யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

| மண்ணில் மழலையாய் | விண்ணில் தெய்வமாய் |
|---|---|
| 02-04-1966 | 24-05-2003 |

குன்றிலிட்ட தீபமென விளங்கிய தெய்வமே!
உன் உறவுகள் நாம் அழும் ஓலம் கேட்கலையோ
விதி செய்த சதியால் சடுதியில் மறைந்திட்டாய்
மதியிழந்து நிற்கின்றோம் பாராயோ.

இன்று (23.06.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
ஆசை மக்கள்,
அன்புக் கணவர்,
பாசமிகு குடும்பத்தினர்.

*61/1, பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.* (19379)

# துயர் பகிர்கின்றோம்

யா/கைதடி குருசாமி வித்தியாலய எமது சக ஆசிரியை
திருமதி சியாமளா கமலசிங்கம் அவர்களின்
அன்புத் தந்தையார்

## சுப்பிரமணியம் சிவயோகநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

ஆசிரியர்
யா/கைதடி குருசாமி வித்தியாலயம். (19355) நலன்புரிக் கழகம்.

# நான்காம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 20 - 01 - 1974



வீரச்சாவு 23 - 06 - 1999

கப்டன் றெஜி / வண்ணன்

## தங்கராசா அழகேந்திரன்

ஈழத்தாய் பெற்றெடுத்த வீரப்புதல்வனே - வண்ணா
எம் தேசத்தின் விடுதலைக்கு உயிர் கொடுத்தவனே!
உன் போன்ற ஆயிரம் ஆயிரம் வேங்கைகள்
சிந்திய குருதி தியாகத்தால் - இன்று சமாதான காலம்
இசைபாடுகின்றது இங்கே - உங்கள் ஈழக்கனவு
இங்கு நிச்சயம் நனவாகும். இது உங்கள் மீது சத்தியம்.

தகவல்:
உடன் பிறப்புகளான
*தங்கராசா கெங்காதரன்* (பிரான்ஸ்),
*தங்கராசா தலேந்திரன்* (இத்தாலி).

*வரணி,*
*இடைக்குறிச்சி.* (19366)

## வீதி புனரமைப்பு விரைவில் பூர்த்தி

தென்மராட்சி,ஜூன்23

உலக வங்கியின் உலர் உணவு நிறுவனத்தினால் பளைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பத்து வீதிகளின் புனரமைப்பு வேலைகளும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்தந்த பிரிவு கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் உதவியுடன் கிராம அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருவதாக பிரதேச சபை செயலாளர் இ.து.சிவராசா தெரிவித்தார். (எ-117)

## கட்டுத்துவக்கு வெடித்து சிறுவனின் கண்ணில் காயம்

தென்மராட்சி,ஜூன்23

கட்டுத்துவக்கினுள் பட்டாசினை வைத்து வெடிக்க வைத்தபோது அதன் அடிக்கட்டை கண்ணில் அடித்து காயமடைந்த சிறுவன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை பளை கரந்தாய் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கணபதிப்பிள்ளை கோகிலதாஸ் (வயது13) என்பவரே கண்ணில் காயமடைந்தவராவார். (எ-117)

## அச்சுவேலியில் மரநடுகை

அச்சுவேலி,ஜூன்23

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அச்சுவேலிப் பகுதியில் மரநடுகைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்படி அச்சுவேலி கஜமுகா பாலர் பாடசாலை, அச்சுவேலி பொதுச் சந்தை ஆகியவற்றில் சமண்டலை, தேக்கு ஆகிய மரக்கன்றுகள் நடப்பட்டன. (எ-10-11)

## தையல் பயிற்சிக்கு விண்ணப்பித்தோர் கவனத்துக்கு!


யாழ்ப்பாணம்,ஜூன்23

கச்சாய் அ.த.க. பாடசாலையில் முறைசாராக் கல்வி அலகின்கீழ் தையல் பயிற்சி நெறிக்கு பதிவுசெய்தவர்களை இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலைக்கு வருகைதருமாறு அதிபர் கே.மங்களேஸ் வரன் கேட்டுள்ளார்.(எ-10-ரி)


SHARP ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது
be sharp
யாழ்ப்பாணத்தில்



SHARP
உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப்பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.
Browns Electronics Live it up
Browns Group of Companies
இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150



உலகப் புகழ் பெற்ற L.G
தொலைக்காட்சிப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA TEL: 021-222-5766

யாழில்
French மொழி வகுப்பு
3 மாத பயிற்சி தமிழ் விளக்கத்துடன்
ஆரம்பம்:
24.06.2003 பி.ப. 2மணி
ஆசிரியர்: இந்திரகுமார் CAP
நேரசூசி மாணவர் வசதி கருதி மாற்றப்படும்.
New College of Higher Studies
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (சி-28500)

O⁺ சிறுநீரகம் தேவை
பொ. விநாயகமூர்த்தி. இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக்கிளை முன்னாள் தலைவருக்கு O⁺ சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகின்றது.
சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:
T.P.No.: 071 - 2399209,
074 - 589324.
(19301)

வைத்தியம்
செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:
வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 2459

# ஆதரவற்ற சிறுவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் இல்லங்கள்

**தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கிளிநொச்சியில் நடத்தப்பட்டு வரும் சிறுவர் இல்லங்களான குருகுலம், காந்தி நிலையம் ஆகியன முறையே இன்று 43ஆம், 46ஆம் ஆண்டுகளை நிறைவு செய்கின்றன. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

எமது தாயக மண்ணில் கடந்த காலங்களில் சொல்லொணா அவலங்களை, அழிவுகளை விதைத்த போர், பொருளாதாரத்தடை, வறுமை, தொழில்வாய்ப்பின்மை போன்றவை சிறுவர் வாழ்வையும் சிதைக்கத் தவறவில்லை.



வன்னி சென்ற உலகவங்கி பிரதிநிதியை மாலை அணிவித்து வரவேற்கும் குருகுல சிறுமிகள்.

பெற்றோரை, உறவுகளைப் பிரிந்தும் இழந்தும் சிறுவர்கள் நிர்க்கதியாக்கப்பட்டார்கள். தாங்க ஒருவருமின்றி, தங்க இடமின்றி அலைந்த சிறுவர்களை அணைத்து, அரவணைத்து பராமரித்துப் பாதுகாக்கும் பொறுப்பும் கடமையும் எமக்கு உண்டென்பதை உணர்ந்து எமது தேசியத்தலைவர்



காலைப் பிரார்த்தனையில் குருகுல மாணவிகள்.

மேதகு வே.பிரபாகரன் அவர்கள் சிறுவர் பராமரிப்பு இல்லங்களை நடத்த வேண்டும், சிறுவர்களை நல்வழிப் படுத்தவேண்டும் எனப் பேரவாக் கொண்டார்.

தலைவர் அவர்களின் சிந்தனை செயல் வடிவமாயிற்று. குருகுலம், காந்தி நிலையம், புனிதபூமி, பாரதி இல்லம் என சிறுவர் பராமரிப்பு இல்லச் செயறபாடுகள் விரிவடையலாயிற்று.

இச்சிறுவர் இல்லச் செயற்பாடுகளை நிர்ணயித்து செயலூக்கப் படுத்தும் தார்மீகப் பொறுப்பும் கடமையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கரங்களுக்கு கிடைத்தது.

தமிழர் தாயகத்தில் உறவிழந்த சிறுவர்கள் என்று வெறுமில்லை என்ற உயர்ந்த சிந்தனையுடன் சிறுவர் வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் தமக்குள்ள கடப்பாடுகளை நிறைவேற்றி அதற்கு உயிரூட்டுவதற்கான தனியான வழிமுறைகளை வகுத்து சிறப்பாக சிறுவர் உரிமைகளைப் பேணிக்காக்கும பாங்கான சிறுவர் நேய செய'' திட்டங்களை தமிழர் புனர்வாழ்வு; கழகம் செயற்படுத்தி வருகின்றமை இன்று யாவரும் அறிந்த உண்மை.

காந்தி நிலையம் என அழைக்கப்பெறும் அகில இலங்கை காந்திசேவா சங்கம் என்னும் சிறுவர் பராமரிப்பு இல்லம் 1957ஆம் ஆண்டு கிளிநொச்சி நகரின் உருத்திரபுரம் கிராமத்தில் தோற்றம் பெற்றது. குருகுலம் என அழைக்கப்பெறும் கரைச்சி சைவ வித்தியாவிருத்திச் சங்கம் எனும் சிறுவர் இல்லம் 1960 ஆம் ஆண்டு ஜெயந்தி நகரில் தோற்றம் பெற்றது. உறவிழந்த பெண பிள்ளைகளை அரவணைத்து, கல்வி அறிவூட்டி, வாழ்வில் மேம்படுத்தும் தூர நோக்குடன் குருகுலம் செயற்பட்டு வருகின்றது.

உறவுகளை இழந்த சிறார்களை அரவணைத்து, பராமரித்து அவர்களுக்கான கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சியினை வழங்கி வளமான சமுதாயத்தை உருவாக்கும் பணியில் தம்மை அர்பணித்துக்கொண்ட குருகுலம், காந்தி நிலையம், சிறுவர் இல்லங்கள் பல லட்சம் பெறுமதியான சொத்துக்களையும், கட்டடங்களையும் தம்மகத்தே கொண்டு காலப்பணியில ஆலவிருட்சம் போல் வளர்ந்து சமூக, சமய பணிகளிலும் தம்மை இணைத்துக் கொண்டன.

தன்னகத்தே கொண்ட விளை நிலங்களின் மூலம் கிடைக்கும் வருமானத்துடன் கால்நடை வருமானம் மற்றும் அரச, தனியார் நிறுவனங்களினதும், நலன்விரும்பிகளினதும் வருமானங்களும் பெற்று சமயப் பெரியோர்களின் நல்லாசியுடன் இப்புனிதமான சேவை தொடரப் பெற்று வந்தது.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக உறுதியுடன் பணியாற்றிய இந்நிறுவனங்கள் 1996ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஸ்ரீலங்கா இராணுவ (சத்ஜெய) நடவடிக்கை காரணமாக அனைத்து சொத்துக்களையும், வளங்களையும் இழந்த நிலையில் வெறும் கைகளுடன முழங்காவில் எனும் கிராமத்திற்கு இடம்பெயர்ந்தமை சிறார்கள் வாழ்வில் ஏற்பட்ட மிகப் பெரிய சோக வரலாறு.

'சொந்தங்களையும் சொத்துக்களையும் மீட்டெடுப்போம்' என்ற உறுதியில் மீண்டும் 09.05.2002 தொடக்கம் சிறுவர் இல்லங்கள் அதே சொந்த இடங்களில் செயற்பெற ஆரம்பித்துள்ளன.

நாட்டில் தொடர்ந்தும் நிலவிய யுத்தத்தின் விளைவினால் வீதியோரங்களிலும், பொது இடங்களிலும் தமது கல்வியைக் கைவிட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பிள்ளைகளுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அபயக்கரம் நீட்டி ஆதரவு கொடுத்து அவர்களுக்குரிய தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றது.

இந்தவகையில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆஸ்திரேலியா, மலேசியா, நியூஸிலாந்து கிளைகளின் நிதியுடனும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினதும், நலன் விரும்பிகளினதும் பங்களிப்பைப் பெற்றும், நல்லாசிகளுடன் இவ்வில்லங்களில் சுமார் 700சிறார்களை வைத்து பராமரித்து வருகின்றது. அச்சிறார்களும் உறவுகளை இழந்தோம் என்ற மன பேதலிப்பு, சோர்வு இன்றி சந்தோசத்துடன் எங்கள் வீடு என்ற எண்ணத்துடன் தமது கல்வியைத் தொடர்ந்த வண்ணம் உள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் பெற்றோரை, உடன் பிறப்புக்களைப் பிரிந்தும், இழந்தும் நிர்க்கதியாக்கப்பட்ட சிறுவர்களை இனங்கண்டு அவர்களின் எதிர்காலத்திற்கு நம்பிக்கை வேர்பாய்ச்சும் பரந்த நோக்குடன் செயலாற்றும் காந்தி நிலையம், குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் முறையே 46, 43 அகவைகளை திருப்தியாக நிறைவுசெய்து மக்கள் முன் மகிழ்வடைந்து, நிறைவடைந்து நிமிர்ந்து நிற்கின்றன

1990ஆம் ஆண்டில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சிறுவர் இல்லங்களைப பொறுப்பேற்றுக் கொண்டதனை அடுத்து உறவிழந்த சிறார்கள் தொடர்ச்சியாக இனங்காணப்பெற்று இல்லங்களில் சேர்க்கப்பெற்றனர்.

தற்போது 700இற்கும் மேற்பட்ட சிறார்கள் இங்கு பயன்பெறுகின்றனர். சிறார்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க செலவுகளும் காலப்போக்கில் அதிகரிக்கத் தொடங்கின. இவ்வாறான செலவு அதிகரிப்பினை நன்கொடைகள், பொது ஸ்தாபனங்களின் ஆதரவுகள் மூலம் ஓரளவு தான் கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்தது. ஆயினும், இவ் உதவிகள் தொடர்ச்சியாக இவ்வில்லத்திற்கு கிடைப்பதில்லை. இந்தநிலையில் வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் தமிழ் சகோதரர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக இச் சிறார்களுக்கு உதவ முன்வந்தமை போற்றுதற்குரிய காலப் பணியாகும்.



வன்னிப் பெருநிலப்பரப்பில் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் 1990ஆம் ஆண்டில் இருந்து இன்று வரைக்கும் (2003) காந்தி நிலையம், குருகுலம், சிறுவர் இல்லங்கள் கணிசமான அளவு பணிகளை சிறப்பாக செய்வதற்கும் காலத்தின் கோலத்தால் பல்வேறு கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தாலும், பெற்றோர், ஆதரிப்போர் அற்ற குழந்தைகளின் புகலிடமாக திகழும் காந்திநிலையம்,



குருகுலம் என்பன கல்விச் செல்வத்தை ஊட்டி நற்பண்புகளை போதித்து எதிர்கால நாயகர்களை வளமாகவும், பலமாகவும் உருவாக்குவதற்கு மிக முக்கியமாக அமைவது ஆஸ்திரேலியா, மலேசியா, நியூஸிலாந்து நாடுகளில் செயற்படும தமிழர் புனர்வாழ்க் கழக கிளைகளே ஆகும்.

கடினமான பாதைகளைக் கடந்து பயணிக்கும் குருகுலம், காந்தி நிலையம் சிறுவர் இல்லங்களுக்கு தேவைகளும் நிறையவே உள்ளன. கல்வித் துறையில் சிறார்களின் காத்திரமான முன்னேற்றத்திற்கு சிறுவர் இல்லங்களுக்கு கணனி வசதி, நூலகவசதி, விஞ்ஞான ஆய்வு கூடவசதி என்பன இன்றியமையாதவையாகும். சிறுவர்கள், பராமரிப்பாளர்கள், பணிப்பாளர்களுக்கான தங்குமிட வசதிகள், பிரார்த்தனை மண்டபம், கற்றல் மண்டபம் என கட்டடவசதிகள் போதாமல் உள்ளன.

சிறுவர்களின் குரல் பரந்தளவில் பலரையும் சென்றடைவதற்கான ஒரு முக்கிய மார்க்கம் அவர்களுக்கு ஊடாக வாய்ப்புக்களை மேலும் அதிகமாக ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

சிறுவர் இல்லங்களில் பிள்ளைகள் விளையாடுவதற்கும், கூடிப் பழகுவதற்கும, தம் உரிமைகள் பற்றிக் கற்றுக்கொள்வதற்கும் சிறுவர்நேய இடங்கள், பூங்காக்கள், இயற்கைக் காட்சியகங்கள் என்பன அமைக்கப்பட வேண்டும்.

### வேலணையூர் சுரேஸ்

பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்ட சிறுவர்களுக்கு வாழ்வில் முன்னேற தொழிற்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தொழிற்பயிற்சி நிலையம் சகல வசதிகளுடன் விரிவாக்கப்பட வேண்டியுள்ளது.

சிறுவர், சிறுமிகள் கலைத்துறையில் ஆர்வமும் ஆற்றலும் மிக்கவர்களாக உள்ளனர். இவர்கள் கலை ஆற்றலை வளர்த்து தமக்கும், தாம் சார்ந்த இல்லங்களுக்கும் நற்பெயர்களை, பாராட்டுகளைச் சம்பாதித்துத் தந்துள்ள போதிலும் கலைச் செயற்பாட்டிற்கு வேண்டிய இசை வாத்தியக் கருவிகளோ, இதர வசதிகளோ சொற்ப அளவுமில்லை. பற்பல வசதிக் குறைகளுக்கும் மத்தியில் எதிர்நீச்சலிட்டு நிறையச் சாதிக்கத் துடிக்கும் சிறார்களின் வாழ்வகங்களான சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் பணி விசாலமானது. ★

---

## சுனில் மெண்டிஸ் கொலை:
# மேல் மாகாண சபை உறுப்பினர் பொலீஸாரால் நேற்று விசாரணை

கொழும்பு,ஜுன்23

மேல் மாகாண சபை உறுப்பினர் சுனில் மெண்டிஸின் கொலை தொடர்பாக முக்கிய தகவல்கள் பலவற்றை பொலீஸார் சேகரித்துள்ளனர்.

இந்த மாகாணசபையின் மற்றோர் உறுப்பினரான எட்வேட் சில்வாவை பொலீஸார் நேற்று விசாரணைக்கு உட்படுத்தியதாக பிரதிப் பொலீஸ்மா அதிபர் பத்மஸ்ரீ லியனகே தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண சபை உறுப்பினரை கொலை செய்த கொலையாளிகளை இனங் கண்டுள்ளபோதிலும் இதுவரையும் இது தொடர்பாக எவரையும் கைதுசெய்யவில்லை என்றும் -

அந்தக் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக 5பொலீஸ் குழுக்கள் கடமையில் ஈடுபட்டு வருகின்றன. இக்கொலையில் சம்பந்தப்பட்ட எந்த அரசியல் வாதிக்கும் எதிராக நடவடிக்கைகளை எடுக்கத் தான் தயங்கப்போவதில்லை என்றும் -

பிரதிப் பொலீஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

கொலை செய்யப்பட்ட மெண்டிஸின் இறுதிக்கிரியைகள் ராகமையில் இடம்பெற்றன. இதில் எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, மேல்மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-5)

---

## ஊர்காவற்றுறை பிரதேச செயலருக்கு பாராட்டு விழா

காரைநகர்,ஜுன்23

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் கடந்த பத்து வருடங்களாக காரைநகருக்கு செய்த சேவையை பாராட்டியும், காரைநகருக்கான புதிய உதவி அரசாங்க அதிபராக பதவி ஏற்றிருக்கும் வே.சாம்பசிவத்தை வரவேற்றும் விழா ஒன்றினை நடத்துவதற்கு காரைநகர்ப் பகுதி பொதுமக்களால் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மேற்படி விழா எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (எ-73)

---




வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் சர்வதேச புகைப் பொருள் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு அளவெட்டி கும்பழாவளை பாரதி சனசமூக நிலையத்தில் அண்மையில் நடத்திய விழாவில் கௌரவ விருந்தினராக கலந்துகொண்ட சங்கானை அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.யோகராசா விளக்கவுரை ஆற்றுவதைப் படத்தில் காணலாம். (எ-135)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கலர்மீன்கள், புதிய வடிவமைப்பிலான மீன்தொட்டிகள், மோட்டர்கள, பல இன குருவிகள், கூடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.
(19365)

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி ஒழுங்கையில் 8பரப்புக் காணி வீடு வளவுடன், பயன்தரும் மரங்களுடன், சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் தொடர்புகொள்ளலாம். F.X. நீக்கலஸ், கல்லூரி ஒழுங்கை, வட்டுகோட்டை (யாழ்ப்பாணக் கல்லூரிக்குப் பின் ஒழுங்கை).
(18964)

தனிப்பாவனையில் உள்ள T.V.S. VICTOR விற்பனைக்குண்டு. மாற்றமும் செய்யப்படும். தொடர்பு: K.பரந்தாமன், இல.82, பலாலி றோட், திருநெல்வேலி.
(19364)

வீட்டுப்பாவனையிலுள்ள சிங்கர் தையல் மெசின், சோக்கேஸ், ரெசின் ரேபிள், டினர் செற், ரீ செற், அலுமினியப் பொருள்கள், எவசில்வர் பாத்திரங்கள், பீங்கான் கோப்பைகள் என்பன விற்பனைக்குண்டு. இல.27, மவுண்காமல் வீதி, யாழ்ப்பாணம்.
(19386)

கண்டி வீதி, பளையில் 11 ஏக்கர் தென்னம் தோட்டம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.51, வைமன் வீதி, நல்லூர்.
(19392)

நல்ல நிலையிலுள்ள 202... தொடரிலக்கமுடைய ஓட்டோவும், CD 125 ருவின் GJ... தொடரிலக்கமுடைய மோட்டார் சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. கிருஷ்ணமூர்த்தி, தேவி அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். T.P.:2789
(19390)

## காணி தேவை

கே.கே.எஸ். வீதிக் கரையில் இணுவிலுக்கும் தட்டாதெருவுக்கும் இடையில் 5 பரப்புக் காணி உடனே தேவை. விவரங்களுக்கு: 103/1, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொ.பே.: 077-6013572.
(19360)

## காணி விற்பனைக்கு

39/1, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் 11/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திலகவதி சண்முகநாதன், 39/1, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (19322)

நெல்லியடி, நாவலர் மடம் சந்திக்கு அண்மையாக அத்திவாரத்துடன் கூடிய நன்னீர் வெட்டுக்கிணறு உள்ள காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இரவு 7மணிக்கு பின். 222 6286.
(19391)

## தவறிவிட்டது

வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சோமசுந்தரம் பாரதி என்பவரின் அடையாள அட்டைகள், வங்கி கணக்குப் புத்தகம், தங்க நகை 31/2 பவுண், 24,000/- பணம் அடங்கிய பை வட்டுக்கோட்டைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் 19.06.2003 அன்று பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
(சி-28515)

## தென்பகுதியில் வெங்காயத்தின் விலை வீழ்ச்சி

அரியாலை,ஜுன்23


தெற்கில் வெங்காயத்தின் விலை திடீரென வீழ்ச்சியடைந்திருப்பதால், யாழ். குடாநாட்டில் இருந்து வெங்காயத்தை ஏற்றுமதி செய்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெங்காய ஏற்றுமதி பாதிக்கப்பட்டிருப்பதால், யாழ். குடாநாட்டில் வெங்காயத்தின் விலையும் திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை -

திருநெல்வேலி சந்தையில் ஒரு கிலோ வெங்காயம் 30 ரூபா முதல் 40ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரம் ஒரு கிலோ வெங்காயம் 60 ரூபா முதல் 80ரூபா வரை விற்கப்பட்டமை தெரிந்ததே.
(எ-17)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப்டினன்ட் தமிழ்வேந்தன்
### செல்வராஜா கார்த்திக்

தாயின் மடியில்
18 - 12 - 1983

தாயக மண்ணில்
23 - 06 - 2001

*கார்த்திகை மாத பௌர்ணமியே – கார்த்திக்*
*என்றும் உந்தன் நினைவே?*
*பந்த பாசம் முற்றும் துறந்தாய் – சொந்த மண்ணை மீட்கத் துணிந்தாய்*
*சேனைத் தலைவன் வழியில் சென்றாய் அரியாலைக் கடலிலே ஆகுதியாய்ச் சங்கமமானாய்*
*தமிழ் வேந்தன் இன்று மாவீரனாய் மண்ணில் வித்தாகி மீண்டும் முளையாயோ?*
*வித்தாகி வீழ்ந்தாலும் மண்ணில் மலர்கின்ற சமாதானத்தை – நீ*
*பார்த்துக் கொண்டே இருப்பாய் எம் ஆருயிர் அண்ணாவே!*

இன்று 23.06.2003இல் முள்ளியவளையில் நடைபெறும் நினைவு நிகழ்விலும், 26.06.2003 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் போராளிகளையும் அன்போடு அழைக்கின்றோம்.

தோப்பு ஒழுங்கை,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (சி-28516)

**- குடும்பத்தினர்.**

## சுடர் ஒளி

29.06.2003 இதழில்

விலை 16 /=




- பொன்விழா கொண்டாடும் DNA
- கப்பல் தகர்ப்புச் சம்பவத்தோடு யாழ்ப்பாணத்தில் போர்ச் சூழ் நிலை (வடபுலம்)
- வாஜ்பாயா, அத்வானியா? பி. ஜே. பியில் பனிப்போர்
- இடர்பாடுகளுக்கு வழியமைக்கும் கடற்பிரதேச நடவடிக்கைகள்
- சந்தேக நகர்வுடன் சமாதானம்! விந்தையாக எழுகின்ற வினாக்கள்!!
- இணைந்து குரல் கொடுக்க பின்னடிப்பு நன்மைகளில் பங்கெடுக்க முண்டியடிப்பு (தேரடி)

அலைகளின் காவியம், பித்தன் பதில்கள், மதன் தொடர், சினிமா, இளஞ்சுடர், கலையமுதம், கவிதைப் புனல், அதிசயம் ஆனால் உண்மை........

(சி-28504)

# தமிழ்மொழிப் பாடசாலைகளின் விசேட கல்விக்கு தனிப்பிரிவு தேவை

தமிழ்மொழிப் பாடசாலைகளில் ஏனைய கல்வித்துறைசார் நடவடிக்கைகள் போன்று விசேட கல்வி அமையவில்லை என அண்மைக் காலங்களில் குறை கூறப்பட்டுள்ளது.

வகுப்பறைகளில் காணப்படும் மாணவர்கள் அனைவரும் ஒத்த தன்மை வாய்ந்தவர்களாகக் காணப்படமாட்டார்கள். அவர்களது உடல் அமைப்பு, உடல்வளர்ச்சி, மனவெழுச்சி, சமூகத்துக்குரிய வளர்ச்சி என்பவற்றினால் இவர்களிடையே வேறுபாடு காணப்படுகின்றது.

பொதுவாக, கல்வியாளர்கள் விசேட தேவைகள் உடைய பிள்ளைகளை உடல் ஊனமுற்றோர், மெல்லக் கற்போர், பிழையான சீராக்கம் பெற்றோர், நெறி பிறழ்ந்தோர், மீத்திறனுடைய பிள்ளைகள் என வகைப்படுத்திக் கூறுவர்.

தமிழ்மொழிப் பாடசாலைகளை அதிகம் கொண்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அண்மைக்காலம் வரை காணப்பட்ட யுத்தசூழல் ஏனைய மாகாணங்களில் காணப்படும் விசேட தேவைகளை உடைய மாணவர்களை விட அதிகமான மாணவர்களை இடம் பெறச் செய்துள்ளது.

வகுப்பறைகளில் காணப்படுகின்ற உடற்குறைபாடுடைய பிள்ளைகள் கேட்டல் குறைபாடு, பார்வைக்குறைபாடு, பேச்சுக் குறைபாடு, அங்கக் குறைபாடு முதலிய குறைபாடுகளைக கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். யுத்த, சூழ்நிலைகளில் உள்ள மாணவர்களது செவிப்பறை வெடித்து கேட்கும் சக்தி குறைவாகவே காணப்படுகின்றது. ஷெல் வெடிப்புக்கள், மிதிவெடிகள் போன்றவற்றினால் கை, கால் இழந்த நிலைகளில் அதிகமான மாணவர்கள் காணப்படுகின்றனர். பொருளாதாரத்தடை, வறுமை போன்றவற்றினால் போசனைக் குறைபாடுடைய பிள்ளைகள, வளர்ச்சி குன்றிய பிள்ளைகள் என்போரை அண்மைக் காலங்களில் இனங்காணக்கூடியதாக உள்ளது.

இதேபோன்று, வகுப்பறைகளில் விசேட தேவையை உடைய மற்றுமொரு வகுதியினராகிய மெல்லக் கற்கும் மாணவர்களை நோக்கும்போது குறித்த வயதுக்குரிய கற்றல் செயற்பாடுகளை செய்யமுடியாத நிலையில் உள்ளவர்கள் இவர்களாவர். அதாவது, எழுதுதல், வாசித்தல், ஆடுதல், பாடுதல் என்பவற்றை அவ்வவ் வயதுக்கேற்ற வகையில் செய்ய முடியாத நிலை இதுவாகும். இந்நிலையிலும் பல மாணவர்கள் இடம்பெயர்வு, முகாம் வாழ்க்கை என்பவற்றினால் இத்தகைய மெல்லக் கற்கும் நிலைக்கு ஏனைய மாணவர்களை விட வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அதிகரித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில கூடுதலான மாணவர்கள் நெறிபிறழ்வுக்கு (பிழையான சீராக்கம்) உட்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். யுத்த நிலைமைகளால் சிறிய வயதிலேயே உறவினர்களை இழந்த நிலை, போதிய அன்பு, காப்பு, கணிப்புத்தேவைகள் நிறைவு செய்யப்படாமை போன்றவற்றினால் முரட்டுத்தனம், வன்செயலில் ஈடுபடுதல், ஒதுங்கிவாழுதல், அதிகம் கோபம் கொள்ளுதல், கீழ்ப்படியாமை, பொய் கூறுதல் முதலான நெறிபிறழ்வுகள் அவர்களை அறியாமலேயே அவர்களை ஆட்கொண்டுவிட்டன.

**ந.ஞானவேல்**
**ஆசிரியர்**
**வ/பூவரசங்குளம் ம.வி.**

இதேபோன்று, வகுப்பறைகளில் விசேட தேவையை உடைய மற்றொரு வகையினராகிய மீத்திறன் உடைய மாணவர்களை அவதானிக்கும் போது குறித்த வயதுக்கு அப்பாற்பட்ட விவேக ஈவும், சிறந்த அடைவு மட்டம் என்பன அதிகம் உடையவர்களே இவ்வகுதியினர் ஆவர். பொருளாதாரத்தடை மற்றும் மின்சாரத்தடைகளால் மீத்திறன் உடைய மாணவர்களது செயற்பாடுகள் மழுங்கடிக்கப்படுகின்றன. தொடர்பாடல் சாதனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலை, கணனி முதலிய நவீன சாதனங்கள் விரல்விட்டு எண்ணத்தக்கவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளன. இவற்றினால் இவர்களும், வகுப்பறை கற்பித்தலில் இடையூறு உடையவர்களாகவே அமைகின்றனர்.

வகுப்பறைகளில் காணப்படும் இத்தகைய விசேட தேவைகளை இனங்கண்டு அவர்களுக்கேற்ற பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகுப்பவர்தான் விசேட கல்வி ஆசிரியர்.

கல்வி அமைச்சில் விசேட கல்விக்கென தனி அலகு உண்டு. தேசிய கல்வி நிறுவகத்திலும் விசேட கல்விக்கென செயற்றிட்ட அலுவலர்கள் காணப்படுகின்றனர். ஆனால், தமிழ் மொழி மூலமான விசேட கல்வி அலகு அங்கும் ஆரம்பிக்கப்படவில்லை.

மாகாணக்கல்வித் திணைக்களங்களில் விசேட கல்வியை நோக்குகையில், ஒவ்வொரு மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கும், ஒவ்வொரு விசேட கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் காணப்படுகின்றனர். ஆனால், வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தைப் பொறுத்தவரையில் விசேட கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளராக சிங்கள மொழி மூலமான உதவிக் கல்விப் பணிப்பாளரே காணப்படுகின்றார். அவர் தன்னால் இயன்றவரை தமிழ்மொழிப் பாடசாலைகளுக்கும் சேவை செய்கின்றார்.

ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு உட்பட்ட சகல வலயக் கல்வி அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் விசேட கலவிக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இடம்பெறவில்லை. ஆசிரிய ஆலோசகர்களும் விரல்விட்டு எண்ணத்தக்க ஒருசிலரே. அதுவும் சிங்களமொழியில் மாத்திரமே காணப்படுகின்றனர்.

தமிழ்மொழி மூலமான இந்த விசேட கல்விக்கான ஆளணியினரின் பற்றாக்குறைக்கு யாது காரணம் என சற்று சிந்திக்கும்போது, ஆசிரிய கலாசாலைகளில் சிங்களமொழியில் விசேட கல்விக்கான பயிற்சிநெறி இருப்பதுபோல் தமிழ்மொழியில் இல்லை. இனிவருங்காலங்களிலாவது விசேட கல்விக்கான தமிழ் மொழி மூலமான பயிற்சிநெறிகளை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலோ அல்லது கல்வியியற் கல்லூரிகளிலோ ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அண்மையில் கோரப்பட்டிருந்த இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குப் பாடரீதியான ஆளணியினரை நியமிப்பதற்கு விசேட கல்விக்கும் கோரப்பட்டமை வரவேற்கத்தக்கதே.

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் பிரகாரம் பாடசாலைகளில் ஆலோசனையும் வழிகாட்டலும் என்ற நிலையில் ஓர் ஆலோசகராக ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவரும் தன்னிடம் வந்து தமது குறைபாடுகளை முன்வைப்போருக்கே தக்க ஆலோசனைகளை கூறுவாரே ஒழிய அவர் விசேட தேவைகளை உடைய மாணவர்களை வகுப்பறைகளில் இனங்கண்டு அவர்களுக்குரிய பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளுவாரா என்பது சிந்திக்கத்தக்கதே.

யுத்த மேகங்கள் கலைந்து சமாதானப் பூக்கள் மலர்ந்து இருக்கும் இன்றைய நிலையில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் யுத்தத்தின் வடுக்களாய் பிரதிபலிக்கும் விசேட தேவையை உடைய மாணவர்களுக்கு தமிழ் மொழி மூலமான விசேட கல்வி எனி மேலும் எட்டாக்கனியாகவேதான் இருக்குமா? ◆

## விசுவமடு மாவீரர் துயிலும் இல்ல புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூன்23

விசுவமடு - தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விசுவமடுப் பிரதேச மக்களின் நிதியுதவியுடனும் அவர்களின் பங்களிப்புக்களுடனும் மாவீரர்களின் வித்துடல்கள் புதைக்கப்பட்ட இடங்களில் நினைவுக் கல்லறைகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி மாவீரர் துயிலும் இல்லத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்களுடைய வித்துடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இவர்களில் 750 மாவீரர்களுக்கு மட்டுமே ஏற்கனவே தற்காலிகமாக கல்லறைகள் கட்டப்பட்டு திரைநீக்கம் செய்யப்பட்டிருந்தன.

தற்போது துயிலும் இல்லத்தின் புனரமைப்புப் பணிகள் கிராம மக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஈடுபட்டு வருகின்றனர் என்றும்-

எதிர்வரும் நவம்பர் மாதம் அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் நாளுக்கு முன்னதாக இந்தப் புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்யும் நோக்குடன் புனரமைப்புப் பணிகளின் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

## கமநலம் பற்றிய விவரம் சேகரிக்கும் பணி ஆரம்பம்

யாழ். கமநல சேவைகள் திணைக்களம் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இயங்கும் விவசாய சம்மேளனங்களின் மூலம் கமநலம் சார்பான புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக, புள்ளி விவரங்கள் அடங்கிய வினாக்கொத்து ஒன்றை மேற்படி திணைக்களம் தயாரித்து சகல விவசாய சம்மேளன பிரதிநிதிகளுக்கும் கடந்த வாரம் வழங்கியுள்ளது.

இக்கையேட்டில் விவசாயம் சார் காணிகள், மேட்டுக் காணி விவரங்கள், விவசாயக் குடும்பங்களின் விவரங்கள், கால்நடை விவரங்கள், விவசாய இயந்திரங்களின் விவரங்கள், நீரிறைக்கும் இயந்திரம் பற்றிய விவரங்கள், வான்பயிர் விவரங்கள், வதிவிட வேளாண்மை விவரங்கள், நீர் நிலைகள், குளங்கள், வாய்க்கால்கள் ஒரு பிரிவாகவும் -

விவசாய வீதிகள், நடுத்தர வீதிகள், பெருந்தெருக்கள், விவசாயம் சார் கைத்தொழில்கள், உவர்நீர் பற்றிய விவரங்கள், உவர்நீர் தடுப்பு அணைக்கட்டுக்கள், அரச காணிகள் பற்றிய விவரங்கள், கமக்கார அமைப்புக்கள், விவசாயம்சார் நிறுவனங்கள், சந்தை வசதிகள் என்பன மறு பிரிவாகவும் - அமைந்துள்ளன.

இதேவேளை - இக்கடமையைச் செய்யும் விவசாயிகள் சம்மேளன பிரிவு பிரதிநிதிக்கு கொடுப்பனவாக 500ரூபாவை வழங்கவும் சம்பந்தப்பட்ட திணைக்களம் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது. (எ-170)

## மதிப்பீட்டுப் பரீட்சைகள்

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய நிலையத்தின் எந்திரவியல் டிப்ளோமா பாடநெறியைப் பயிலும் மாணவர்களுக்கான தொடர் மதிப்பீட்டுப் பரீட்சைகள் இம்மாதம் 28ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் ஜூலை மாதம் 7ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறும்.

பரீட்சை அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறாதவர்கள் யாழ். பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் யாழ்.பிராந்திய நிலைய இயக்குநர் எந்திரி ச.ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.(எ-11)

## மீசாலை விபத்தில் மாணவி காயம்

வளைவொன்றில் திரும்பிய சைக்கிள் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் சைக்கிளில் வந்த மாணவி காயமடைந்த சம்பவம் கடந்த வெள்ளியன்று மாலை 6 மணியளவில் மீசாலை வடக்கு மந்துவில் சந்தியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த குமாரசாமி சுஜீவினி (வயது 15) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரியூசனுக்கு சென்றுவிட்டு சைக்கிளில் சக மாணவிகளுடன் சமாந்தரமாகச் சென்று வீதிவளைவில் திரும்பியபோதே விபத்து இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. (எ-117)

## கல்விச்சாலைக் காட்சிகள்



வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் நடைபெற்ற முன்பள்ளி விளையாட்டு விழாவில் நவாலி வடக்கு கலைமகள் முன்பள்ளி மாணவர்கள் வழங்கிய நடன நிகழ்வைப் படத்தில் காண்கிறோம். (எ-185)



வண்.வடமேற்கு வைத்திலிங்கம் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் வித்தியாலய அதிபர் கதிர். செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட நல்லூர் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன் வெற்றியீட்டிய மாணவர் ஒரு வருக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ-195)



யாழ். சென்மேரிஸ் வித்தியாலயத்தின் இல்லமெய்வன்மைப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.கல்வி வலய அலுவலக களஞ்சியப் பொறுப்பாளர் ம. பிரதீபன் ஒலிம்பிக் தீபம் ஏற்றுவதையும், அவரது துணைவியாருக்கு விளையாட்டுத் தலைவி மலர்ச்செண்டு வழங்கிக் கௌரவிப்பதையும் படத்தில் காணலாம்.

பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வித்தியாலய அதிபர் ம.செபஸ்தியாம்பிள்ளை ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-51)




வரணி, இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய பவள விழா நிகழ்வில் அதிபர் சு. தர்மலிங்கம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா, முன்னாள் வரணி கொத்தணி அதிபர் சி.துரைராசா, வரணி சேவலப்பட்டி கந்தசாமி ஆலய பிரதமகுரு குகதாசசர்மா ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். (எ-117)

# 'நொறாட்' உதவியுடன் சமூக வலுவூட்டல் திட்டம்

## சர்வோதயம் செயற்படுத்தும்

'நொறாட்'நிறுவனத்தின் நிதி உதவியுடன் சர்வோதய அமைப்பு கிராமங்கள் தோறும் சமூக வலுவூட்டல் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இதன்கீழ் தலைமைத்துவப் பயிற்சி, முதலுதவிப் பயிற்சி மற்றும் மொழிப் பயிற்சி போன்ற பயிற்சிகள் கிராமங்களிலுள்ள இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் இளைஞர்களை தலைமைத்துவப் பண்புகள் மிக்க ஆளுமையுள்ளவர்களாக மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும் என்று சர்வோதய அமைப்பின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கே.கனகரட்ணம் தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் உள்ள பாலர் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சி வகுப்புகளும் மேற்படி திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், சிறுவர்கள், பெற்றோர்களுக்கும் விசேட கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

## உடுவில் மகளிர் முன்னணியில்

வலிகாமம்தெற்கு,ஜுன்23

கடந்த வாரம் நடைபெற்ற உடுவில் கோட்ட பாடசாலைகளின் கோட்ட மட்டத்திலான தமிழ்த் தினப் போட்டிகளில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் அநேக போட்டிகளில் முதலிடங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளனர்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

47போட்டிகளில் 20 போட்டிகளில உடுவில் மகளிர் கல்லூரி முதல் இடத்தைப் பெற்றுள்ளது. மாகாண மட்டம் வரை செல்லக்கூடிய வயலின், புல்லாங்குழல், வீணை, இசை நாடகம் என்பவற்றிலும் உடுவில மகளிர் கல்லூரியே முதலிடம் பெற்றுள்ளது. (எ-152)

# சிறுமியின் தங்கச்சங்கிலி கத்தி முனையில் அபகரிப்பு

## ஆனைக்கோட்டைப் பகுதியில் சம்பவம்

ஆலய உற்சவம் ஒன்றில் கலந்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சிறுமியின் 2 பவுண் தங்கச் சங்கிலி வீதியில் வைத்து கத்திமுனையில் அபகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி ஆனைக் கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

சம்பவதினம் காலை 10 மணியளவில் ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய கொடியேற்றத்தில் கலந்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சோ. யாழினி என்ற 12வயதுச் சிறுமியை மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இரு இளைஞர்கள் மறித்துள்ளனர்.

அவ்வேளையில், மேற்படி வீதியில் சனநடமாட்டம் இருக்கவில்லை. அக்கம்பக்கம் பார்த்துவிட்டு சிறுமிக்கு அருகில் சென்ற ஓர் இளைஞர் அவரின் விவரங்களை விசாரித்துள்ளார். அப்போது மற்றைய நபர் திடீரென கத்தி ஒன்றை எடுத்துக் காட்டி சத்தம் போடாதே என்று மிரட்டியவாறு சிறுமியின் கழுத்திலிருந்த சங்கிலியைக் கழற்றியுள்ளார். பின்னா இருவரும் மோட்டார் சைக்கிளில் ஏறித்தப்பிவிட்டனர் எனக்கூறப்படுகிறது. (எ-100-4)

## டேவிஸ் கிண்ண டென்னிஸ் சுற்றுப்போட்டி:

# புருணை அணியுடனான போட்டியில் இலங்கை அணிக்கு ஆறுதல் வெற்றி

டேவிஸ் கிண்ண டென்னஸ் தொடரில் இலங்கை அணி தனது கடைசி லீக் போட்டியில் புருணை அணியை வென்றது. எனினும் இரண்டாம் சுற்றுக்கான தகுதியை இலங்கை அணி இழந்தது.

வெள்ளியன்று மாலை நடைபெற்ற புருணை அணியுடனான ஒற்றையர் போட்டிகளில் இலங்கை வீரர்களான ஹர்ஷன கொடமான்ன, புருணை ராஜீவ் ராஜபக்ஷ இருவரும வென்றனர்.

18வயதான ஹர்ஷன கொடமான்ன, புருணை வீரர் ஹாஜி இப்ராஹிமை 6-0, 6-1 விகிதத்தில் வென்றார். இப்போட்டி 40 நிமிடங்களில் முடிவுற்றது.

மற்றோர் ஒற்றையர் போட்டியில் இலங்கையின் ராஜீவ் ராஜபக்ஷ, புருணையின் பில்பி கலுங் வோங்கை 6-0, 6-0 விகிதத்தில் இலகுவாக வென்றார்.

இரட்டையர் போட்டியிலும் இலங்கை அணி புருணையை தோற்கடித்தது.

இதற்கு முன், பலம்வாய்ந்த அணியான சவூதி அரேபியாவிடம் ஒற்றையர் போட்டிகள் இரண்டிலும் இலங்கை தோல்வியுற்றது. வியட்நாமிடம் 1.2 விகிதத்தில் இலங்கை தோல்வியுற்றது.

இதனால், இலங்கை அணி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இழந்துள்ளது.

குழு 'ஏ' இலிருந்து சவூதிஅரேபியா, வியட்நாம் அணிகளும் குழு 'பி' இலிருந்து ஓமான், மியான்மார் அணிகளும் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றன.

இத்தொடரில் 5-8 இடங்களை தெரிவு செய்வதற்கான போட்டிகளில சிங்கப்பூர், பங்களாதேஷ், புருணை அணிகளுடன் இலங்கையும் பங்கு பற்றவிருந்தது.

# முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கைக்கு 354 ஓட்டங்கள்

மேற்கிந்திய அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி தனது முதல் போட்டியில் 354 ஓட்டங்களைப் பெற்றது.

கடந்த வெள்ளியன்று சென். லூசியா நகரில் இப்போட்டி ஆரம்பமானது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும் இலங்கை அணியின் உப தலைவருமான மாவன் அத்தப்பத்து 118 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் போட்டிகளில அவர் பெற்ற 11ஆவது சதம் இதுவாகும்.

275 பந்துவீச்சுக்களை எதிர்கொண்ட அத்தப்பத்து, 15 பௌண்டரிகளையும் அடித்தார். குமார் சங்கக்கார 56 ஓட்டங்களையும் மஹேல ஜயவர்த்தன 46 ஓட்டங்களையும் பெற்றனர். அணியின் தலைவர் ஹஷான் திலகரட்ண, முன்னாள் தலைவர் சனத் ஜயசூரிய ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

முதல் நாள் ஆட்டமுடிவில் இலங்கை அணி 4 விக்கெட் இழப்பிற்கு 250 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இரண்டாவது நாளான சனிக்கிழமையன்று மேற்கிந்திய வேகப்பந்து வீச்சாளர் கொரி கொலிமோர் சிறப்பாகப் பந்து வீசினார். இதனால் 354 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும இழந்தது இலங்கை அணி. பின் வரிசை வீரர் சமிந்த வாஸ் 125 பந்துவீச்சுக்களை எதிர்கொண்டு 38 ஓட்டங்களைப் பெற்றார்.

கொரி கொலிமோர் 66 ஓட்டங்களுக்கு 5விக்கெட்டுக்களை வீழ்த்தினார். டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் கொலிமோர் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியமை இதுவே முதல் தடவையாகும்.

மேற்கிந்திய அணி சனியன்று தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது. அன்றைய ஆட்ட முடிவின் போது 2விக்கெட் இழப்பிற்கு 161 ஓட்டங்களைப் பெற்றிருந்தது அவ்வணி.

வவெல் ஹிண்ட்ஸ் 74 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் பிரையன் லாரா 36ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# விளையாட்டு

# அதிபார குத்துச் சண்டையில் லூயிஸ் மீண்டும் சம்பியன்

உக்ரேன் வீரர் விட்டாலி கிளிட்ஸகோவுடனான அதிபார குத்துச் சண்டையில் பிரிட்டிஷ் வீரர் லெனொக்ஸ் லூயிஸ் வெற்றிபெற்றார்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நேற்றுமுன்தினம் இபபோட்டி நடைபெற்றது. இப்போட்டியில் தொழில்நுட்ப அடிப்படையில் லூயிஸ் வெற்றி பெற்றார். இருவரும் கடுமையான மோதலில் ஈடுபட்டனர்.

7ஆவது சுற்றுக்கான மணி அடித்த போது கிளிட்ஸ்கோவின் இடது கண் அருகே காயம் ஏற்பட்டிருந்தமையால் மத்தியஸ்தர் லோ மோரட் போட்டியை நிறுத்தினார். அதையடுத்து வெற்றிபெற்ற உற்சாகத்தில் கைகளை உயர்த்தினார் லூயிஸ்.

போட்டி நிறுத்தப்படும்போது, நடுவர்கள் மூவரினதும் கணிப்பில், கிளிட்ஸ்கோ 58-56 விகிதத்தில் முன்னணியில் இருந்தார்.

போட்டியின் பின் அவர் கருத்துத் தெரிவிக்கையில், "நான் தற்போது மக்களின் சம்பியனாக உணர்கிறேன். எந்தவொரு சூழ்நிலையிலும் போட்டி நிறுத்தப்படுவதை நான் விரும்பவில்லை.

"வெற்றிபெற்றுள்ளேன் என்றே நான் கருதுகிறேன். எனது குத்துக்களால் அவர்(லூயிஸ்) காயமடைந்துள்ளார் என்பது எனக்கு தெரியும்" என்றார்.

ஆனால், மருத்துவர் வலஸ் கூறுகையில், "நான் இரண்டாவது முறையாக, களத்திற்குள் சென்ற போது என்னைப் பார்க்குமாறு கிளிட்ஸகோவிடம் கூறினேன் அவரது இமைகள மூடப்பட்டிருந்தன. அதனால் என்னைப பார்ப்பதற்கு அவர் தலையை உயர்த்த நேர்ந்தது. இந்நிலையில், போட்டியை நிறுத்துவதைத் தவிர எனக்கு வேறு வழியிருக்கவில்லை" -என்றார்.

இவ்வெற்றியின் மூலம் உலக குத்துச் சண்டைக் கவுன்ஸில் (டபிள்யூ.பி.சி.), சர்வதேச குத்துச்சண்டை அமைப்பு (ஐ.பி.ஓ.)ஆகியவற்றின் சம்பியன் பட்டங்களை லெனொக்ஸ லூயிஸ் தக்கவைத்துக்கொண்டார்.

37வயதான லூயிஸ் இதுவரை 44போட்டிகளில் பங்குபற்றி 41தடவைகள் வென்றுள்ளார். 2போட்டிகளில் தோல்வியுற்றார். ஒரு போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது.

கிளிட்ஸ்கோ இதுவரை 34 போட்டிகளில் பங்குபற்றி 32தடவை வெற்றி பெற்றார். 2தடவை தோல்விகளைத் தழுவியுள்ளார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜுன்23

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் விபுலானந்தர் ஞாபகார்த்த சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறவிருக்கும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ பிற்பகல் 3.30மணி-ஜொனியன்ஸ் வி.க. எதிர் ஜொலி ஸ்ரார் வி.க.

☆ பிற்பகல் 4.15மணி-யாழ். பல்கலைக்கழக அணி எதிர் சென்றலைற்ஸ் வி.க.அணி.

☆ மாலை 5.15மணி-பற்றீசியன் வி.க. எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் வி.க. (எ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுன்23

யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்கம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப போட்டியில் இன்று திங்கட்கிழமை மாலை 4மணிக்கு நல்லூர் சட்டநாதா ஆலயத்திற்கு அண்மையில் உள்ள சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ மாலை 4மணி-காங்கேசன் துறை ஐக்கிய வி.க. எதிர் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க.

அச்சுவேலி நவோதயா வி.க. எதிர் அரியாலை ஐக்கிய வி.க.

☆ மாலை 5மணி-அச்சுவேலி தோப்பு வி.க. எதிர் நாயன்மார்க்கட்டு பாரதி வி.க. அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க. எதிர் ஆவரங்கால் மத்திய வி.க. (எ-5)

★ ★ ★

சண்டிலிப்பாய்,ஜுன்23

பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய வன்மைப் போட்டிகள் இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2.00மணிக்கு வித்தியாலய அதிபர் வே.சிவசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளன.

வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராகவும், சண்டிலிப்பாய் உதவிப்பிரதேச செயலர் மு.பாலசிங்கம் சிறப்பு விருந்தினராகவும், பிரான்பற்று கிராம அலுவலர் மா.தயானந்தன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-5,135)


## மரண அறிவித்தல்

**தம்பையா நிதராமவீரலிங்கம்** *(சேது வாத்தியார்)*

முல்லைத்தீவு, அம்பலவன்பொக்கனையைச் சேர்ந்த தம்பையா நிதராமவீரலிங்கம் (சேது வாத்தியார்) அவர்கள் 20.06.2003 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பேரானந்தரூபன் (சுவிஸ்), பேரானந்தரூபி (கனடா), சிவரூபன் (கனடா), செல்வரூபன் (முல்லைத்தீவு), மோகனரூபி (யாழ்.நுண்கலைப்பீட இறுதிவருட மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அபிசா, அனுசன், ரிலக்சன், லக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் மகேந்திரன், நாகராசா, பாஸ்கரன், ரதி (செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2003) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 4.00 மணிக்கு தகனக்கிரியைக்காக அம்பலவன்பொக்கனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நி. செல்வரூபன் (மகன்),
சோ. நாகராசா (மைத்துனர்).

*அம்பலவன்பொக்கனை,*
*முல்லைத்தீவு.* (19395)



யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கலை வர்த்தக மாணவர் மன்றம்
**வணிகநாதம் மலர் வெளியீடு**
(10ஆவது ஆண்டு சிறப்பு மலர்)

*காலம்:* இன்று(23.06.2003) திங்கட்கிழமை காலை 10மணி
*இடம்:* கந்தையா உபாத்தியாயர் மண்டபம்
*தலைவர்:* செல்வன் ப.ராதாகிருஷ்ணசர்மா
*பிரதம விருந்தினர்:* திருமிகு ப.விக்கினேஸ்வரன் (கல்வி அதிபதி - யாழ். வலயம்)
*சிறப்புவிருந்தினர்:* திருமிகு ச.சிவநேஸ்வரன் (அதிபர் - சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி)
*கௌரவ விருந்தினர்:* திருமிகு S.குபேரநாதன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்)
*ஆசியுரை:* திருமிகு க.சிவாஜி (முதல்வர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
*வெளியீட்டுரை:* திருமிகு மு.கதிரமலை (தலைவர், முகாமைத்துவத்துறை - உயர் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்)
*நயப்புரை:* திருமிகு சி.சிவகுமாரன் (ஆசிரியர் - கொக்குவில் இந்துக்கல்லூரி, வணிகத்துறை)
*நிறைவுரை:* திருமிகு ஆறு.திருமுருகன் (மன்றப் பொறுப்பாசிரியர்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
கலை வர்த்தக மாணவர் மன்றம்,
கந்தரோடை, சுன்னாகம். (19388)



யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
**நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்- 2003**

*தலைவர்:* திரு. பொ. சுந்தரலிங்கம் அவர்கள் (அதிபர்)
*இடம்:* கல்லூரி மண்டபம்
*காலம்:* நாளை (24.06.2003) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி
*பிரதம விருந்தினர்:* பேராசிரியர் இ.குமாரவடிவேல் B.Sc.(Hons), Ph.D.(Bristol) (பீடாதிபதி, விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
*நினைவுப் பேருரை:* உயர்திரு. மனோ.ஸ்ரீதரன் அவர்கள் (தலைவர், தொழில் நியாயசபை, மேலதிக நீதிவான் - கொழும்பு)
*சிறப்பு விருந்தினர்:* திரு. கா.சந்திரபாலன் அவர்கள் (உதவிக் கல்விப்பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)
*கௌரவ விருந்தினர்:* கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள
*பரிசில் வழங்கல்:* திருமதி ராஜினி குமாரவடிவேல் அவர்கள்
*நன்றியுரை:* (செயலாளர், பழைய மாணவர் சங்கம்)

*பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(19383) - மகாஜனக் கல்லூரிச் சமூகம்.

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3705760 இருந்து
3722140 வரை
சீட்டிழுப்பு இல. 1411
திகதி 21.06.2003

**வெற்றி எண்கள்** 07 11 21 25 36 — **போனஸ் எண்** 22

**ஜக்பொட் பரிசு**
**ரூபா.1,500,000/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 100 | 10,000/- | 1,000,000/- |
| 3 | 5,110 | 500/- | 2,555,000/- |
| 2 | 84,538 | 20/- | 1,690,760/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 07ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 104,120 | 10/- | 1,041,200/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,486,960/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா. 2,302,050/-**

தொடர் இல. 2734677க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2002 ஜுன் 25ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3715720-8-35
3716455-3-39
3711483-8-63
3711871-7-00
3707225-9-68

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 484 |
| திகதி | 20.06.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5000000-5013057

**வெற்றி இலக்கங்கள்** 08 13 18 51

**லக்கினம்** மீனம்



**ஜக்பொட் பரிசு**
**ரூபா. 1,000,000/-**
**வெல்லப்படவில்லை**

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,645,150/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 285,313 | 10 | 2,853,130 |
| 2 இலக்கங்கள் | 26,194 | 20 | 523,880 |
| 1 இல + லக்கினம் | 26,072 | 30 | 782,160 |
| 2 இல + லக்கினம் | 2,380 | 100 | 238,000 |
| 3 இலக்கங்கள் | 719 | 500 | 359,500 |
| 3 இல + லக்கினம் | 50 | 5,000 | 250,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 340,732 | - | 5,406,670 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,406,670/-

தொடர் இல. 4013297க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஜுன் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5007557-6-84
5003004-7-68
5005807-2-03
5006312-2-19
5000247-8-01

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



உத்தரவு பெற்ற நில அளவையாளரும்,
ஹாட்லிக் கல்லூரியின் உதைபந்தாட்டம்
மற்றும் துடுப்பாட்டக்குழுக்களின் முன்னாள்
தலைவரும், பழைய மாணவருமாகிய
இடைக்காட்டைச் சேர்ந்த
திருவாளர்
**மாணிக்கம் சிவஞானசுந்தர**

அவர்கள் நீதிபதி பா.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாகப் பதவிப்பிரமாணம் பெற்றமையையிட்டு அக மகிழ்வடைவதுடன், அவரது சமூக சேவை மேன்மேலும் சிறப்புடைய மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

இடைக்காடு.
மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையத்தினர்.
(19385)

# கலட்டி எச்சாட்டி ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலய மகா சபைக் கூட்டம் 2003/2004

மேற்படி ஆலய மகா சபைக் கூட்டம் எதிர்வரும் (29.06.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நிகழவிருக்கின்றது என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம். அங்கத்தவர்கள் தமது அங்கத்துவப் பணத்தை கோயிலில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

ஆலய அயலில் உள்ளவர்கள் புதிய அங்கத்தவர்களாகச் சேர விரும்பின் அவர்களும் அங்கத்துவப் பணம் ரூ.100/- (ஆயுள் 1000) செலுத்தி அங்கத்தவராகி, மகா சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என அறியத்தருகின்றோம். உற்சவ உபயகாரர் அனைவரையும் இக்கூட்டத்திற்கு சமுகந்தருமாறு வேண்டுகின்றோம்.

புதிய பரிபாலன சபை உறுப்பினர்கள்
தெரிவும் இடம்பெறும்.

- ஆலய பரிபாலன சபை.
(19384)

# மரண அறிவித்தல்கள்

## அழகரத்தினம் இரட்னசிங்கம்

அழகரத்தினம் இரட்னசிங்கம் அவர்கள் 20.06.2003 வெள்ளிக்கிழமை ஆஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பேரின்பத்தின் கணவரும் சிவகுமார், ராசகுமார், மலைமகள், தேவகுமார், பாலகுமாரன் ஆகியோரின் தந்தையும் நடராசா, தியாகராசா, காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை மற்றும் செல்வராசா, இந்திரராசா, மனோன்மணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றன.

T.P: 006495274296

தகவல்:- மைத்துனர்
Dr.C.Indrarajah,
Urumpirai.
(19394)

## தங்கராசா நிறஞ்சன்

இலகடி, அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தங்கராசா நிறஞ்சன் (நீதிமன்ற கட்டுநர் - பருத்தித்துறை நீதிமன்றம்) வெள்ளிக்கிழமை (20-06-2003) அன்று காலமானார்.

அன்னார் சாந்தினி (நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் - யாழ். நீதிமன்றம்) அவர்களின் அன்புக் கணவரும் தங்கராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) - கனகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் கணேசராசா - சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகனும் அனுஷியா, உமாகரன், மனோகரன், கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வராசா, வாணி, சுபாஜினி, வாசுகி, கமலினி, சர்வேந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை (21-06-2003) அன்று அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அன்று மாலை கரும்பன் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலகடி,*
*அல்வாய் கிழக்கு.*
(சி-28510)
தகவல்:
மனைவி - சாந்தினி.

## திருமதி இராசையா கனகம்மா

தோப்பு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா கனகம்மா 18.06.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா அவர்களின் அன்பு மனைவியும் சொர்ணமலர் (கனடா), இராசதுரை (காசாளர், வ.கி.வடபகுதி ப.நோ.கூ.ச.அச்சுவேலி), காலஞ்சென்ற செல்வராணி மற்றும் பத்மநாதன், கமலாதேவி, இந்திராதேவி(சுவிஸ்), தர்மராஜா(கனடா), கலாநிதி, அற்புதநிதி, லிங்கேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சதாசிவம், குண்டுமணிதேவி, இராசதுரை, பவளராணி, காலஞ்சென்ற ஞானலிங்கம் மற்றும் செல்வராசா (சுவிஸ்), சிவசோதி (கனடா), வாமதேவன் (உதவி மேற்றன், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), செந்தில்நாதன் (லண்டன்), தமிழாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஸ்ரீபாலரஞ்சன், பகீரதரஞ்சினி, கிருபானந்தி, அகிலானந்தன், மயூரானந்தன், காலஞ்சென்ற திவாகரமூர்த்தி, ஸ்ரீகரன் மற்றும் கலைச்செல்வி, கருணாகரன், இராசநளினி, இராசரஞ்சினி, இராசமோகன், மயூரன், நந்தகுமார், செல்வகுமார், மதுரா, நிசானி, ஜனார்த்தனன், ஜயீலன், குமுதினி, ரோகினி, காயினி, கோமகள், தர்சினி, உதயமகள், தர்மினி, நிலாஜினி, பிரதீபன், காந்தரூபன், சொரூபன், சகாயரூபன், சுரீனா, சுமலதன், ஆர்த்திகா, ஆரணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.06.2003 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இராச வீதி தோப்பு,
அச்சுவேலி.
(19387)

தகவல்:
இ.இராசதுரை (மகன்)
இ.பத்மநாதன் (மகன்)
இ.லிங்கேஸ்வரன் (மகன்)
சு.வாமதேவன் (மருமகன்)

# 'பொங்குதமிழ்' நிகழ்வு ஓர் எழுச்சிப் போர் அதனை வன்முறையாக கருதிவிடாதீர்!

## சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர்

யாழ்ப்பாணம்,ஜூன்23

பொங்குதமிழ் ஓர் அஹிம்சைப் போர். இதனை வன்முறையாகக் கருதி விடாதீர்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைவர் எஸ்.கஜேந்திரன்.

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள 'எங்கள் நிலம் எமக்கு வேண்டும்' என்ற தலைப்பிலான பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். கோயில் வீதியில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு அமைப்புகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அங்கு உரை நிகழ்த்தியபோதே மாணவர் பேரவைத் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று எம்மவர் சிலர் மத்தியில் எழுந்துள்ள கேள்வி பொங்குதமிழ் என்றால் என்ன? எல்லாவற்றுக்கும் பொங்குதமிழ் செய்வதால் எதற்காக அது செயற்படுத்தப்படுகின்றது? என்பதை விளங்கிக்கொள்ள முடியவில்லையே என்பதே ஆகும்.

உண்மையில், பொங்குதமிழ் என்பது 'தமிழர் உரிமைகள் மறுக்கப்படும் போது, அதனை உலகுக்கு உணர்த்தி எமது உரிமைகள் எமக்குப் பெற்றுத் தரப்படுதல் வேண்டும் என்பதை உலகிற்கு உணர்த்துவதே.

இதில் வன்முறைக்கோ, வீண் வாதத்திற்கோ இடமில்லை. இதுவும் ஓர் அஹிம்சை வழிப் போராட்டமே. இது உரிமை கோரும் மக்கள் போராட்டமும்கூட.

2001ஆம் ஆண்டு மிகுந்த இக்கட்டான சூழ்நிலையில், இராணுவக் கெடுபிடிகளையும் மீறிய ஒரு போராட்டமாகவே பொங்குதமிழ் நடத்தப்பட்டது. அது எமக்குப் பெரும் வெற்றியையும் தந்தது.

உலகின் காதுகளைக் கிழித்து கண்களைத் திறந்து உரிமை மறுக்கப்பட்ட நிலையில் இங்கு தமிழன் துன்பங்களால் வதங்கிக்கொண்டிருக்கின்றான் என்ற உண்மையை உரக்கவும், உறைக்கவும் கூறியது. இதுவே, எமக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி.

இதன்பின்னர் உலகின் பார்வை எமது பக்கம் திரும்பியது. போரை சமாதானப் பேச்சுவரை அந்த நிகழ்வு நகர்த்தியது.

எனினும், இன்று புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிட்டது போன்று எந்தவொரு விடயமும், முன்னேற்றகரமாக இடம்பெறவில்லை. இதனைவிட, இராணுவ அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. இவை அனைத்தையும் விளக்குவதற்காகவே பொங்கு தமிழ் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பேச்சு மேசையில் சொல்வது ஒன்றாகவும், நடைமுறைக்கு வருவது ஒன்றாகவும் உள்ளது. இதனைவிட இடைக்கால நிர்வாக விடயமும்கூட இழுத்தடிப்பாகவே உள்ளது.

எனவே, இவற்றை உடனடியாக வழங்குமாறு கோரி உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களினதும், ஊடகங்களினதும் பிறநாட்டு உயர் அதிகாரிகளினதும் உதவியுடன் இம்முறை பொங்குதமிழ் இடம்பெறவுள்ளது.

யுத்தமற்ற சமாதானம் ஒன்று ஏற்படவேண்டுமானால், அதற்குப் பொங்கு தமிழ் நிகழ்வே ஒரே வழியாகும். யுத்தத்தின்மூலம்தான் சமாதானம் ஏற்படும் என்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அது சாத்தியமற்றது என்பதனை இன்று அனைவருமே உணர்ந்துள்ளார்கள்.

எனவே, அனைவரும் ஒன்றுதிரண்டு இந்த நிகழ்வில் பங்குகொண்டு உலகிற்கு உண்மையை உணர்த்துங்கள் - என்றார்.

நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக்குழுவின் தலைவர் வண. பிதா பேர்னாட் அடிகளார் தமது உரையில்:-

இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொங்குதமிழ் நிகழ்வு தென்பகுதிச் சமூகம் முழுவதையுமே தட்டியெழுப்புவதாகவும் -

தமிழரின் நிலையை அவர்கள் உணர்வதற்கு வழிவகுப்பதாகவும் - அமைதல் வேண்டும்.

இன்று சில அந்நிய சக்திகளின் தூண்டுதலாலும், படையினரின் குரோத மனப்பாங்கினாலும் சமாதானப் பேச்சில் விரிசல்கள் வளர்ந்து வருகின்றன.

இத்தகைய தீயசக்திகளின் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவுமே இந்தப் பொங்குதமிழ் அமைதல் வேண்டும் - என்றார்.

(எ-12-5)



மு.சிங்கராயர் எழுதிய 'கூவிப்பறந்த கோகிலங்கள்' என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

கலாநிதி என்.சண்முகலிங்கன், கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் மற்றும் நூலாசிரியர் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ)

## கோண்டாவில் கிழக்குப் பகுதியில்

# கோஷ்டி மோதல்களை அடுத்து காவல் கடமையில் படையினர்

வலி.வடக்கு,ஜூன்23

கோண்டாவில் கிழக்கு பகுதியில் இரு இளைஞர் குழுக்களுக்கிடையே தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் மோதலைத் தொடர்ந்து கோண்டாவில் பகுதியில் இராணுவத்தினரும் பொலீஸாரும் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் கடந்த 17ஆம் திகதி முதல் இடம்பெற்றுவரும் இரு இளைஞர் கோஷ்டிகளுக்கு இடையிலான மோதல் காரணமாக இளைஞர்கள் சிலர் கத்தி வெட்டுக்கு இலக்காகியதுடன், வீடுகள் மற்றும் சனசமூக நிலையம் என்பன சேதத்துக்கு உள்ளானமை தெரிந்ததே.

இதனையடுத்து, இந்தப் பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலைமையைக் கருத்திற்கொண்டு படையினர், பொலீஸார் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (எ-86)

# பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கு மனிதநேய அமைப்புகள் ஆதரவு

யாழ்ப்பாணம்,ஜூன்23

'நாங்கள் எங்கள் வீடுகளுக்கு செல்வதற்கு இராணுவத்தினரே உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்' என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கு யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் பூரண ஆதரவு வழங்கும்.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கான பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் யாழ். கோயில் வீதியில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் நடைபெற்றது.

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.பகீரதன், நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழுவின் தலைவர் வண. பிதா பேர்னாட் அடிகளார் மற்றும் கியூடெக் இணைப்பாளர் வண.பிதா ஜெயக்குமார் அடிகளார், முன்னாள் மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், முஸ்லிம் பிரதிநிதிகள், யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகள், சர்வதேச இந்து குருமார் ஒன்றியப் பிரதிநிதிகள், யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் உறுப்பினர்கள் எனப் பல அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பித்தல், சகல அதிகாரங்களும் கொண்ட இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் ஒப்படைத்தல், உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல் என்ற மூன்று முக்கிய கோரிக்கைகளையும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்து விளக்கும் வகையில் பொங்குதமிழன்று லட்சக் கணக்கான மக்களிடம் கையொப்பங்களைப் பெறுவதும் என்றும் -

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பொங்குதமிழ் எழுச்சியின் இறுதிநாள் நிகழ்வுக்கு வருகைதரும் பொது மக்களுக்கு படையினரால் ஏற்படக் கூடிய அசௌகரியங்கள் தொடர்பாக யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட தலைவருடன் கலந்துரையாடுவது என்றும் -

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வை பெரும் எழுச்சியுடன் கொண்டாடப் பூரண ஆதரவை வழங்குவது என்றும் - இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (எ-5-12)



பண்டத்தரிப்பு தபாலகப் பிரிவில் உபதபால் அதிபர்களாகப் பணியாற்றி உதவித் தபால் அதிபர்களாகப் பதவி உயர்வுபெற்ற செல்வி கமலேஸ்வரி பத்மநாதன், திருமதி சத்தியவாணி நந்தகுமார் மற்றும் இடமாற்றத்தில் யாழ்.பிரதம தபாலகத்திற்குச் சென்ற எஸ். மியரெறன்ஸ் ஆகியோருக்கு தபாலகத்தினர் அண்மையில் பிரியாவிடை நிகழ்வை நடத்தியபோது எடுக்கப்பட்ட படம். (எ-135)

# எதிர்காலம் பற்றி சிந்தித்தவர்களுக்கு 'வெண்புறா' நிறுவனம் கைகொடுத்தது

## டாக்டர் ஜெயகுலராஜா தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூன்23

எதிர்காலம் பற்றிச் சிந்தித்தவர்களுக்கு ஒளிமயமான வாழ்வு உண்டு என்பதை வெண்புறா நிறுவனம் உறுதிசெய்துள்ளது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் வெண்புறா நிறுவனத்தின் தலைவர் டாக்டர் ஜெயகுலராஜா.

வெண்புறா நிறுவனத்தின் பத்தாம் ஆண்டு நிறைவுவிழா அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னியில் போரின் காரணமாக அல்லற்பட்டு துன்புற்ற மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் வெண்புறா நிறுவனம் இன்று பாரிய மரவிருட்சமாக வளர்ந்துள்ளது.

வெண்புறா நிறுவனத்திற்கு தூண்களாக நின்று பல்வேறு வழிகளில் உதவிய 'யுனிசெவ்' நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பவற்றின் பணிகள் அளப்பரியன.

அவை ஆற்றிய பணிகளை மறுக்கமுடியாது. இவர்களே வெண்புறாவின் இன்றைய வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டனர் என்றும் கூறலாம்.

இன்று இடம்பெயர்ந்து வாழும் எமது மக்கள் கண்ணிவெடி, மிதிவெடி போன்ற பல்வேறு வகையான துன்பங்களினாலும் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த நிறுவனத்தின் உதவியானது அளப்பரியதாகும்.

எமது தேசியத் தலைவரின் சிந்தனையில் உருவாக்கப்பட்ட வெண்புறா நிறுவனம் பிரதேச ரீதியாகவும், தமது சேவையினை விஸ்தரிக்கவுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட சகல இன மக்களுக்கும் இந்த நிறுவனம் கைகொடுத்து உதவும்.

- என்றார் அவர்.

(எ-ரி)

## வீராங்கனை ஆஸ்பத்திரியில்!

வலி.வடக்கு,ஜூன்23

ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட பெண் வீராங்கனை மயக்கமுற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் தடகள விளையாட்டுப் போட்டியில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்ட கோண்டாவிலைச் சேர்ந்த தம்பித்துரை றெஜினா(வயது 20) என்பவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(எ-86)

## உயர் பாதுகாப்பு வலயத்துக்கு அருகில்

# ஆலயப் புனரமைப்புக்கு அனுமதி; கும்பாபிஷேகத்துக்கு தடை விதிப்பு

## தெல்லிப்பழைப் பகுதியில் படையினரின் நடவடிக்கை

தெல்லிப்பழை சிவகுருநாதர் ஆலய கும்பாபிஷேகத்தை நடத்துவதற்குப் படையினர் பல இடையூறுகளைக் கொடுத்துவருவதாக பக்தர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழையில் உயர் பாதுகாப்பு வலய எல்லையை அண்டிய பகுதியில் அமைந்திருக்கும் மேற்படி ஆலயத்தின் புனரமைப்பு வேலைகளுக்கு அண்மையில் படைத்தரப்பினரால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தற்போது புனருத்தாரணப் பணிகள் நிறைவடைந்து கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகியிருக்கின்றன.

எனினும், கும்பாபிஷேகக் கிரியை நிகழ்வுக்குச் செல்லும் பக்தர்கள் சில வேளைகளில் படையினரால் இடைவழியில் மறிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றனர் என்று கூறப்பட்டது. ஆலயத்தில் மாலை நேர பூசைகளுக்கும் படையினர் தடைவிதித்துள்ளனர்.

அத்துடன், கும்பாபிஷேகக் கிரியைகளின்போது ஆலயத்தில் ஒலிபெருக்கிகளைப் பாவிப்பதற்கு படையினர் அனுமதி மறுத்துவிட்டனர்.

ஆலய புனரமைப்புக்கு அனுமதி வழங்கிய படையினர், அவ்வாலயத்தில் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்துவதற்கு இடையூறுகளை ஏற்படுத்தி வருவது குறித்து அப்பகுதி மக்கள் கடும் விசனமும் கவலையும் வெளியிட்டுள்ளனர். (எ-4-86)

# மடு ஆஸ்பத்திரியின் நிர்வாகம் திருச்சிலுவை கன்னியர் சபையிடம்

## அருட்சகோதரி கினேயா தகவல்

மடு வைத்தியசாலையை திருச்சிலுவை கன்னியர் சபையினர் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர்.

மேற்படி வைத்தியசாலைக்கு பொறுப்பான அருட்சகோதரி கினேயா இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்:-

பாம்புக்கடியினாலும் கண்நோய், மலேரியா காய்ச்சல் போன்றவற்றாலும் பாதிக்கப்பட்டவர்களே எமது நிலையத்தை நாடி வருகின்றனர்.

அவசர நோயாளிகளை வேறு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்க அம்புலன்ஸ் வண்டி இல்லை. ஒவ்வொரு தடவையும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டே அம்புலன்ஸ் வண்டியை அழைக்கவேண்டியுள்ளது.

இதனால் நேரவிரயமும் ஏற்படுகின்றது.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு மேற்படி வைத்தியசாலைக்கு உதவுவதற்கு சகல தரப்பினரும் முன்வரவேண்டும் - என்றார் சகோதரி கினேயா (எ-30)

## வெண்புறா நிறுவனத்துக்கு நிதி அன்பளிப்பு

'வெண்புறா' செயற்கை உறுப்பு நிறுவனத்துக்கு லண்டனில் உள்ள ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலயத்தினால் 54 லட்சத்து 14 ஆயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் வன்னிப் பிரதேசத்துக்கு விஜயம்செய்த மேற்படி ஆலயத்தின் பிரதமகுரு எஸ்.சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையிலான குழுவினரே இந்த நிதியை வழங்கியுள்ளனர். (எ-10-ரி)

# முல்லைத்தீவில் இன்னமும் மருந்துக்குத் தட்டுப்பாடுதான்

## வைத்திய அதிகாரி கூறுகிறார்

முல்லைத்தீவு,ஜூன்23

முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் மருத்துவர்கள் மற்றும் தாதியர்களுக்குப் பெரும் பற்றாக் குறை நிலவுவதாக முல்லை. மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் அழ கேந்திரன் தெரிவித்தார்.

முல்லை.மாவட்ட வைத்திய சாலைக்குக் குறைந்தது 6வைத்தி யர்கள் தேவையான போதிலும் ஒரு வைத்தியர் மட்டுமே இருக்கின்றார். 36 தாதியர்கள் தேவையாக உள்ள போது 7பேர் மட்டுமே பணியாற்றுகின றனர் எனவும் அவர் தெரிவித்தார். இதனால் வைத்தியசாலைப் பணிகளைச் சீராக முன்னெடுக்க முடியாமல் இருப்பதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தாதியர்களுக்கான மேலதிக நேர சம்பளங்கள் நிறுத்தப்பட்டுள்ள தால் இருக்கின்ற தாதியர்களும் தமது கடமை நேரம் தவிர்ந்த மேலதிக நேரத்தில் வேலை செய்வதில்லை. இதனால் நோயாளர் விடுதிகளில் தாதி யர் பற்றாக்குறை நிலவுகின்றது.

சுகாதார அமைச்சினால் எமது மாவட்டம் திட்டமிட்டுப் புறக்கணிக் கப்படுகின்றது. அரசின் பாரபட்சமான செயற்பாடுகளால் சீரான முறையில் நோயாளர்களுக்குச் சிகிச்சை யளிக்க முடியவில்லை. நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

2003ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு நிறைவுபெறப்போகும் வேளையிலும் முதலாம் காலாண்டிற் கான மருத்துப் பொருள்களைக் கூட சுகாதார அமைச்சு இதுவரை அனுப்பி வைக்கவில்லை.

பல மருந்துவகைகள் முடி வடைந்துவிட்டன. நோயாளர்கள் மருத்துவமனைக்கு வந்து திரும்பிப் போகின்றனர். நோயை பரிசோதித்து விட்டு மருந்தை வெளியில் வாங்கும் படி கூறவேண்டியுள்ளது.

நோயாளர்கள் வெளியில் அதிக விலை கொடுத்து மருந்தை வாங்க வேண்டியுள்ளது.

யுத்த காலத்தில்தான் மருந்து களை தடைசெய்யக் காரணங்கள் கூறிய அரசு தற்போதைய சமாதான காலத்திலும் முல்லை மாவட்டத்திற்கு மருந்துகள் அனுப்பாததினால் தொடர்ச்சியாக எமது மாவட்டத்தில் மருந்துப் பிரச்சினை ஏற்பட்டிருக்கின் றது.

-இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

(ஐ-4-5)


## கட்டணம் குறைப்பு

**R.B.BOOKING CENTRE**

எமது நிறுவனத்தின் யாழ். - கொழும்பு பயணக்கட்டணம் 1000/= இலிருந்து 850/= ஆக குறைக்கப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**ஆர்.பி(B) பஸ் ஆசன பதிவகம்**

*15.நவீன சந்தை, யாழ்ப்பாணம்.*

(19402)

வைரவர் கோயில் அருகில்
நவீன சந்தை வெளிப்புறம்
யாழ்ப்பாணம்.


## வாழ்த்துகிறோம்

சமாதான நீதிவான்களான வடமராட்சியின் மைந்தர்கள்,

**திரு.க.நாகலிங்கம், திரு.பொ.வியாகேசு**

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

*COLOMBO 4*
*T.P.0777 - 780182.*

(C 28517)

எஸ்.திருச்செல்வம்
NATHAN INN

## பொங்கு தமிழ் -ஜூன் 27 தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் பங்கு கொண்டு எமது உரிமைக்காகக் குரல் கொடுக்குமாறும் இன்று முதல் வெள்ளி வரையான பொங்கு தமிழ் எழுச்சி வாரத்தை கல்வி நிறுவனங்களில் தோரணங்கள் கட்டியும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரித்தும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்குமாறும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(19407) **யாழ்.நல்லூர் கோட்ட த.க.நி.ஒன்றியம்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மாணிக்கம் இலட்சுமி

கரணவாய், மூத்தவிநாயகர் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிர்காமு மாணிக்கம் அவர்களின் மனைவி இலட்சுமி அவர்கள் நேற்று (22.06.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திலகமணி, கமலாம்பிகை(பிரான்ஸ்), விமலாம்பிகை (லண்டன்), தில்லைநாதன்(சட்டத்தரணி) ஆகியோரின் அன்புத் தாயார் ஆவார்

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2003) திங்கட்கிழமை மதியம் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
யாகசுந்தரம் தில்லைமணி,
கரணவாய்,
(மூத்தவிநாயகர்கோவிலடி)

(C/28518)

### செல்லையா செல்வரட்ணம்

(தேவி கொமியுனிக்கேஷன் உரிமையாளர், பிரதான வீதி, கொழும்புத்துறை)

இல.49, நெடுங்குளம் வீதியைச் சேர்ந்த செல்லையா செல்வரட்ணம் நேற்று(22.06.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும் இராஜேஸ்வரியின்(தேவி) அன்புக் கணவரும் திருமதி சுமதி மோகன்(நோர்வே), பிரதீப் (கனடா), பிருந்தாபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரி(கனடா), காலஞ்சென்ற பரமசாமி, பரமேஸ்வரி(கிளிநொச்சி), சண்முகலிங்கம்(இந்தியா), கமலேஸ்வரி, தவலட்சுமி(கிளிநொச்சி), முத்துலிங்கம்(இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*49, நெடுங்குளம்வீதி,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.*
*T.P.0777 - 159156*

(19408)

தகவல்:
மனைவி,
பிருந்தா(மகன்)


## முக்கிய அறிவித்தல்

**CHEMISTRY CENTRE**
**(BRANCH)**

**NO.432, Temple Rd.** இல் நல்லூர் சூழலில் இன்று ஆரம்பம்.

★ ஆரம்பமாகும் புதிய அலகுகள்

**Organic**
**Inorganic**
**General**
**Thermo Chemistry**
**Paper Class**

**By:- அன்பழகன் (அன்பு)**

அட்சரகணிதம்
சிக்கல் எண்கள்
காவிகள்
சார்பு ஆர்முடுகல்
(ஆப்பு)

**By:- ராஜன்**

**Heat**
**Electricity**
அலைகளும்
அதிர்வுகளும்
வினாவிடை

**By:- சிவலிங்கம்**

★ அலகுகள் ஆரம்பிக்கப் பட்டு விட்டதால் இவ்வாரத் தின் பின் அனுமதி வழங்கப் படமாட்டாது.

★ ஒரே கட்டணத்துடன் எல்லா அலகுகளையும் கற்கலாம்.

(C 28519)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சரத்குமார் (இருவேடம்), தேவயானி நடித்த
**சூரிய வம்சம்** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
**RED DRAGON**

(C28291)

**வீனஸ்** அச்சுவேலி



சத்தியராஜ் மகன்... சிபி, ஷெரின், நாசர் நடிக்க
**ஸ்ருடன்ட் No 1**
**STUDENT No 1** (ரீல்ஸ்)
தினசரி காட்சி 2.00, 7.00
இந்தியாவில் அதிகநாள் ஓடிய வெற்றிப்படம்
**THE SCORPION KING** (ரீல்ஸ்)
(சண்டைப்படம்) தினசரி காலை 11.00 மணி

**நாகம்ஸ்** சுன்னாகம்

பிரகாஷ் ராஜ், மீனா, ரகுவரன் நடித்த
**" தயா "** (ரீல்ஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பி.நே.)
வெள்ளி, சனி ஞாயிறு விசேட காட்சி 7.00 (பி.நே.)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
K.S.ரவிக்குமாரின்



சரத்குமார், ஜெயராம், மீனா, ரம்யாகிருஷ்ணன்
10.30, 2.30, 6.30, 8.30 (பி.நே.)


# மொனறாகல பி. ச. செயலாளர் கைதாகி விளக்க மறியலில்

மொனறாகல, ஜூன்23

மொனறாகல பிரதேச சபையின் முன்னாள் செயலாளர் மூன்று லட் சத்து 37ஆயிரம் ரூபாவுக்கான இரண்டு காசோலைகளை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் மீது சட்டநட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மொனறாகல பிரதேச சபைத் தலைவர் மொனறாகல பொலீஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து செய லாளரான நிவ்டன் அப்பு என்பவரை பொலீஸார் கைது செய்து மொன றாகல மாவட்ட நீதிவான் ஜனபா ஏ.எஸ்.எம்.மைமுனா முன்னிலையில் ஆஜர் செய்தனர். நீதிவான் சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்கும் படி உத்தரவிட்டார்.

மொனறாகல பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் ஜீ.வி.கருணாதுங்க, சார்ஜன்ட் வசந்த, கான்ஸ்டபிள் ஜயசூரிய ஆகியோரைக் கொண்ட பொலீஸ் கோஷ்டி விசாரணையை மேற்கொண்டு வருகிறது.

(ஐ)

## மரண அறிவித்தல்கள்

### சிவகுரு கதிரவேலு

கோவிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிவகுரு கதிரவேலு நேற்று (22.06.2003) ஞாயிற றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - தெய்வானை தம்பதிகளின அன்பு மகனும் பகவதியின் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி, கந்தர், கணபதி,பொன்னு ஆகியோரின் அன்புச் சகோதரனும் பேரம்பலம், புனிதராணி, புஸ்பராசன்(ஜேர்மனி), புஸ்பராணி(சுவிஸ்), புஸ் கரன்(பிரான்ஸ்) ஆகியோரின எ ஆகியோரின் மாமனாரும், விஜயலஷ்மி, அமரர் விஜயபகவான், கேசவன், விஜயரூபா, லக்ஷன் (ஜேர்மனி) பிரசன்னா, பிரமியா(சுவிஸ்) புவன் சிறீந்திரன் ஆகியோரின் பேரனும் நித்தியாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.06.2003) திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில்(கோப்பாய்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.பேரம்பலம் (மகன்)
(கந்தசாமி)
க.புனிதராணி (மகள்)

*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

(19406)

### இராமலிங்கம் வைத்தியநாதன்

காரைநகர், விளானை - களபூமியைச் சேர்ந்த இராமலிங்கம் வைத்திய நாதன் நேற்று(22.06.2003) ஞாயிற்றுக்கிழமை காரைநகரில் காலமானார்.

அன்னார் காரைநகர் ப.நோ.கூட்டுறவுச் சங்க முன்னாள் முகாமையாள ரும் பின்னர் சவூதி அரேபியாவில் கடமையாற்றியவரும் முன்னாள் ஆசிரியருமான அமரர் வைத்தியநாதர் இராமலிங்கம், பூரணம் தம்பதியின ரின் மூத்தமகனும் புஸ்பமலரின் அன்புக் கணவரும் மனோராஜா (U.K), தனுஜா(மாணவி, யாழ் இந்து மகளிர் கல்லூரி), தர்சினி(வேம்படி மகளிர் கல்லூரி), கோபி(காரைநகர் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அம்பிகைபாகன், பாலகிருஸ்ணன்(பொறியியலாளர் SAE) அமரர் குகதாஸன், திருமதி கமலாதேவி சிவஞானம் ஆகியோரின் சகோதரனும் Dr.தில்லையம்பலம் - லீலாதேவி(U.K) தம்பதியினரின் மூத்த மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.06.2003) திங்கட்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது காரைநகர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர், களபூமி தில்லை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்.

*விளானை,*
*களபூமி,*
*காரைநகர்.*

(19403)

தகவல்:
திருமதி வை.புஸ்பமலர்
(மனைவி)

### திருமதி சரஸ்வதி இராசையா

அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சரஸ்வதி இராசையா அவர்கள் நேற்று(22.06.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி விஸ்ணுலட்சுமி அவர்களின் கனிஷ்ட புதல்வியும் ஓய்வுபெற்ற ஆசிரியர் வ.இராசையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அரியக்குட்டி, திருமதி இரத்தினம் கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அரசகேசரி(ராதா - கிளிநொச்சி செயலக மேலதிக மாவட்ட காணிப்பதிவக பிரதம லிகிதர்), மனோகரன் (ரஞ்சன்- இந்தியா), கருணாகரன்(கருணா - யா/இளவாலை அ.த.க.வித்தியாலய ஆசிரியர்), மதிகரன்(மதி - யாழ்.பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதி), தேவகி ஆகியோரின் அன்புத் தாயாரும் ராதாமணி, யோகநாயகி, அருந்ததி(குடும்ப நல உதவியாளர், யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை) ஆகியோரின் அன்பு மாமியாரும் கோபிராகவன், கோகுலராகவன், கோசலரூபினி, ஆதவன், மாதுரி, மாதவன், ஆர்த்திகா, சிந்துஜன், தேன்மொழி, நிலானி, சோபிதா, சஞ்சயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.06.2003) திங்கட்கிழமை 2.30மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இராச வாசல்,*
*நொத்தாரிசு வீதி,*
*அரியாலை மேற்கு.*

(19399)

தகவல்:
இ.மதிகரன் (மகன்)

### திருமதி பறுவதம் (பாக்கியம்) நாகமுத்து (கனடா)

Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் தெற்குப் புன்னாலைக்கட்டுவனைப் புகுந்த இடமாகவும் தற்போது ரொறன்ரோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பறுவதம்(பாக்கியம்) கடந்த 2003.06.21 ஆம் திகதி கனடாவில் காலமானார்.

அன்னார் தெற்குப் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த பிரபல வர்த்தகரும் கிரசர் உரிமையாளருமான குட்டியர் நாகமுத்துவின் அன்பு மனைவியும் வரதராசன்(கனடா), தயாளன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீநிதி, தயாபரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென் றவர்களான அம்மாப்பிள்ளை, நாகம்மா,தம்பிப்பிள்ளை, வல்லிபுரம், கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 2003.06.25 புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். இரங்கல் நிகழ்வுகள் சுன்னாகத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

*'தயாளகிரி'*
*Dr. சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*

(19404)

தகவல்:
கு.தம்பிப்பிள்ளை
(மைத்துனர்)

# புலிகளின் கப்பல் வருவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு முதலில் நம்பகரமான தகவல் கிடைத்திருந்தது.

புரிகளின் சரக்குக் கப்பல்கள் இரண்டு இலங்கையை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மூலம் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு, சம்பவம் இடம்பெறுவதற்கு மூன்று நாள்களுக்கு முன்னரே தகவல் கிடைத்து விட்டது. அவர் உடனே அப்போது ஹவாயிலிருந்த கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரியை தொடர்பு கொண்டு தகவலைத் தெரிவித்தார். கிழக்குக் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் வசந்த கரணாகொடவுக்கும் பலகல்ல இதனைத் தெரிவித்திருந்தார். இதை அடுத்து, கிழக்குக் கடற்படைத்தளபதி புலிகளின் கப்பலை எதிர்பார்த்து முழு அளவிலான ஆயத்தநடவடிக்கைகளை மேற்கொண்டார்.

ஜூன் 13ஆம் திகதி இரவு நான்கு கண்காணிப்புப் படகுகளை நடவடிக்கையில் ஈடுபடுத்திய கிழக்கு கடற்படைத் தளபதி 'பிரதாப', 'உதர', 'ரனஜெய' ஆகிய பீரங்கிப் படகுகளையும் 'நந்திமித்ரா' என்ற அதிவேகக் கடற்கலத்தையும் இந்த முறியடிப்பு நடவடிக்கைக்கு ஆயத்தமாக்கினர்.

ஜூன் 14 ஆம் திகதி அதிகாலை 3.15 மணிக்கு புலிகளின் கப்பல் அவதானிக்கப்பட்டது. 5.30 மணிக்கு கடற்படையின் பிரதானி மொகான விஜேவிக்ரமவுக்கு அறிவிக்கப்பட்டது. 5.50 மணிக்கு கடற்படைத் தலைமையகத்துக்கு வந்த மொகான் விஜேவிக்ரம காலை 6.15மணிக்கு கப்பல் அவதானிக்கப்பட்ட தகவலைத் தெரிவிப்பதற்காகப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்டின் பெர்ணாண்டோவுடன் தொடர்புகொண்டார். ஒஸ்டின் அப்போது யாழ்.செல்வதற்காக இரத்மலானை விமான நிலையத்துக்கு அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, மகேஸ்வரன் சகிதம் சென்று கொண்டிருந்தார். பின்னர் மொகான் விஜேவிக்ரம ஹவாயிலுள்ள கடற்படைத்தளபதியுடன் தொடர்பு கொண்டு தகவலைத் தெரிவித்தார். அப்போது "என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று எனக்குத்தெரியும் நான் அறிவுறுத்தல்களை அங்கு வழங்கிவிட்டேன்" என்று கடற்படைத் தளபதி பதிலளித்திருக்கிறார்.

காலை 7.15மணியளவில்தான் சம்பவம் பற்றிப் பாதுகாப்பு அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், கப்பல் வெடித்து மூழ்கத்தொடங்கிவிட்டது.

கப்பலுடன் கட்டி இழுக்கப்பட்டு வந்த இன்னொரு படகு அப்பகுதியிலிருந்து தப்பிவிட்டது. காலை 7.45 மணிவரை தப்பிச்சென்ற புலிகளின் படகைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணிக்காக விமானப்படையினரின் உதவி கோரப்படவேயில்லை.

காலை 8.45 மணியளவிலேயே இரத்மலானை விமான நிலையத்திலிருந்து தேடும் விமானம் புறப்பட்டு, தப்பிச் சென்ற படகைத் தேடி வலை விரித்தது. சுமார் 6 மணி நேரம் தேடுதல் நடத்தியும் அவ்வாறான எந்த ஒரு படகும் கடலில் அவதானிக்கப்படவில்லை. கிழக்குக் கரையில் 100 கடல்மைல் முதல் 280 கடல்மைல் வரை இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அங்கு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை - என்று விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா கூறியுள்ளார்.

இப்படியொரு சம்பவம் இடம்பெறப் போகிறது என்று முன்னரே - மூன்று நாள்களுக்கு முன் - தெரிந்தும் கூட கடற்படைத் தளபதி இது பற்றி உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. அதுவும், பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியப்படுத்தவில்லை. சம்பவம் இடம்பெறுவதற்கு இரண்டு நாள்களுக்கு முன் - ஜூன் 12 ஆம் திகதி - ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவிப்பதற்கு ஹவாயிலிருந்து தொடர்புகொண்ட போதும் கூட கடற்படைத் தளபதி இந்த முன்னறிவித்தல் பற்றி மூச்சுக் காட்டவில்லை.

அத்துடன், கடற்படையின் தளபதிக்கும் அவருக்கு அடுத்த நிலையிலிருக்கும் பிரதானிக்கும் இடையிலான கசப்புணர்வுதான் கப்பல் மூழ்கடிப்பு வரை கடற்படையினர் எதேட்சாதிகாரமான நடவடிக்கையை மேற்கொள்ள வழிகோலியது எனப்படுகிறது.

தான் வெளிநாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளும் தருணங்களில் நாட்டின் அனைத்து கடற்படைத் தளங்களுக்கும் அது பற்றி அறிவித்துவிட்டு, பதில் கடமையை பிரதானி மொகான் விஜேவிக்ரம மேற்கொள்வார் என அறிவித்து விட்டுச் செல்வது கடற்படைத்தளபதி தயா சந்தகிரியின் வழக்கம் ஆனால் அண்மையில் தனது பதவி உயர்வு தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்திருந்த மொகான் விஜேவிக்ரம தனது மனுவில் கடற்படைத் தளபதியைப் பிரதிவாதியாகக் குறிப்பிட்டிருந்தார்.

இதன்பிறகு சந்தகிரிக்கும் விஜேவிக்ரமவுக்கும் இடையில் முறுகல் கிளம்பியது.

இம்முறை ஹவாய் செல்லு முன்னர் தனது விஜயம் பற்றிக் கடற்படைத்தளங்களுக்கு அறிவித்த சந்தகிரி, பதில் கடமைக்காக எவரையும் நியமிக்கவில்லை. படைத்தளப் பொறுப்பதிகாரிகள் தன்னுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி எண்ணை வழங்கி விட்டுச் சென்றார்.

இதனால் கப்பல் மூழ்கடிப்புச் சம்பவம் இடம்பெற்ற அன்று கடற்படையினர் மொகான் விஜேவிக்ரமவின் கட்டளைகளுக்குக் காத்திராமல் களநிலைவரம் பற்றி வெளிநாட்டிலிருந்த கடற்படைத்தளபதியுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு பேசி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இவையெல்லாமே புலிகளின் கப்பல் மூழ்கடிப்புக்குத் திரியாகியிருக்கின்றன - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ். பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வுகளை ஒட்டி பேரணிகள் ஏதும் நடத்தப்படமாட்டாது. சகல பகுதிகளிலும் இருந்து வாகன அணிகளாக மக்கள் வந்து பல்கலைக்கழக வளாகத்தில் கூடி நிகழ்வில் பங்கு கொள்வர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

சகல பிரதேசங்களில் இருந்தும் சுமார் 2 லட்சம் மக்கள் எழுச்சி நிகழ்வில் ஒன்றுகூடுவர் என ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்க்கின்றனர். அவர்களுக்குத் தேவையான குடிதண்ணீர் மற்றும் அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதர்கள், பத்திரிகையாளர்கள், சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மலையகம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் இருந்தும் பொதுமக்கள், மாணவர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் இந்த எழுச்சி நிகழ்வில் பங்குபற்றவிருக்கிறார்கள். (ஐ-3-5)

GIT
புதிய பிரிவுகள் ஆரம்பம்
01.07.2003 மாலை 4.30 மணி
A/L மாணவர்களுக்கான
General Infomation
Technology(GIT)பாடநெறிக்குரிய புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளதால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் மாணவர்கள் உடனடியாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.
இயக்குநர்,
IIS,யாழ்ப்பாணம்.
(சி-28512)

விக்னா
கல்வி நிறுவனம்
A/L 2003 DAY CLASS
Eco. - திரு.விக்கி (7-8)
Tam. - திரு.குழந்தை (8-9)
Hic. - திரு.பத்மராஜா (7-8)
Geo. - திரு.பாபு (9-10)
Dra. - திரு.மதி (10-11)
Hist. - திரு.சுதன் (11-12)
Chri. - திரு.வசந்தன் (11-12)
ஆரம்பம்: 25-06-2003
புதன் 7மணி (19393)
LOG
திரு.சயந்தன்
சனி, ஞாயிறு 8மணி




# தகவல் தொடர்பு கல்விக்கு கிளிநொச்சியில் நிறுவனம்

## வெளிநாட்டு அமைப்பின் உதவியுடன்

கிளிநொச்சி,ஜூன்23

தகவல் தொடர்புத்துறை சார்ந்த கல்வியை வளர்க்கும் நோக்குடன் அமெரிக்காவில் உள்ள ஈழத் தமிழர்கள் ஒன்று சேர்ந்து வழங்கிய நிதியுதவியுடன் தகவல் தொடர்புக் கல்வி நிறுவனம் ஒன்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

கலிபோர்னியாவில் சான்யோஷ் என்னும் இடத்தில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் தொண்டு அமைப்பு ஒன்று இந்த நிறுவனத்தை அமைக்க உதவியுள்ளது.

முதல் கட்டமாக 60 மாணவர்கள் இந்த நிலையத்தில் சேர்க்கப்படவிருக்கின்றனர். பின்னர் தொடர்ச்சியாக மாணவர்கள் இணைக்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. (ஐ-3)

## நாடு துண்டாட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமாதான நடவடிக்கைகளை ஜனாதிபதியின் தலைமையில் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம்.

சமாதான நடவடிக்கைகள் சரியான முறையில் திட்டமிட்டு ஜனாதிபதி தலைமையில் மேற்கொள்ளப்படும். இதனூடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வுக் காண்பதற்கும், நாட்டைத் துண்டாடாமல் பாதுகாப்பதற்கும் நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து மக்களதும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையிலேயே புலிகளுடன் பேச்சு நடத்துவோம்.

- இப்படி அவர் தெரிவித்தார். (ஐ-3-9)

## காணாமற்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றெமிடியஸ், சந்திரபால குமாரகே ஆகியோர் கொண்ட குழு இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது என்றும் -

தெரிவிக்கப்பட்டது.

காணாமற்போனோர் தொடர்பாக ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடுவதெனவும் நேற்றைய கலந்துரையாடலில் முடிவுசெய்யப்பட்டது. (ஐ-5-12)

## லண்டனில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவைச் சந்தித்து தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் குறித்தும் புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இடைஞ்சலாகவுள்ள விடயங்கள் குறித்தும் ஆராய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர் மிலிந்த மொறகொட, அமெரிக்காவில் இருந்து நேராக லண்டன் சென்று பிரதமருடன் பேச்சுக்களில் கலந்துகொள்வார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக அமைப்பு வழங்குவது தொடர்பான சட்ட அம்சங்களை இவ் விஜயத்தின்போது முக்கியமாக ஆராய்வார் என அறியப்படுகிறது. (ஐ-3-9)

த சாரிகா லேனர்ஸ்
சகலவிதமான வாகனங்கள் செலுத்துவதற்கு சிறந்த முறையில் முழுப்பயிற்சி அளித்து சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள யாழ் நகரில் (இலங்கையில் பல பாகங்களிலும் சிறந்த சாரதிகளை உருவாக்கிய) த சாரிகா லேனர்ஸ் நிறுவனத்தினர் தமது யாழ்ப்பாணக் கிளையை 20.06.2003 வெள்ளிக்கிழமைமுதல் ஆரம்பித்திருக்கின்றார்கள் என்பதை யாழ் மக்களுக்கு அறியத் தருகின்றோம்.
பஸ் நிலையம் முன்பாக
முனியப்பர் கோயில் வீதி,
இல.38, கந்தப்பசேகரம் வீதி,
யாழ்ப்பாணம்.
(19318)
தலைமைக் காரியாலயம்,
இல.108, புதிய பஸ்நிலையம்,
வவுனியா.
T.P.: 024 23515

இந்திய பரம்பரை ஜோதிடர்
அருள்வாக்கு அம்பிகா அம்மா
மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை. ஜாதகம் பார்க்கப்படும்.
உங்களுக்கு எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டாம்.
உடனே அம்மாவைச் சந்தியுங்கள்; நன்மை அடையுங்கள்.
அம்மாவைச் சந்திக்கும் இடம்:-
அருள்வாக்கு அம்பிகா அம்மா
மடோனா லொட்ஜ்.
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீமுருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்.
(19362)

பொதி விநியோக சேவையில் வெற்றிகரமான
TNT
ஒரு வருட பூர்த்தி
50% விசேட தள்ளுபடி
சர்வதேச கூரியர் சேவை. உள்நாட்டு கூரியர் சேவை. சர்வதேச தபால் சேவை போன்ற சேவைகளுக்கு 50% சிறப்புத் தள்ளுபடியினை (50% Special Discount) வழங்குகின்றோம் என்பதை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
தொடர்புகளுக்கு எமது புதிய முகவரி
TNT கூரியர் சேவை
இல. 487, ஆஸ்பத்திரி வீதி,
(சிற்றி மெடிக்கல் கட்டடம்)
யாழ்ப்பாணம்.
:- 021 2223771 / 0777-270452
உங்கள் அன்பை 'பொதியாக' மிகவும் குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டில் உள்ள உங்கள் அன்புக்குரியவர்களுக்கு அனுப்பிட அரியதொரு சந்தர்ப்பம்!
இச்சலுகை 2003 ஜூன் 30 வரை மட்டுமே
(C/28509)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.06.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.